# தமிழோசை

## அரும்பு -02

தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர்

ஒக்டோபர் 2021

மக்கள் சேவைக்கே நாம்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,**

**நெளுக்குளம்,**

**வவுனியா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர் - 2021

# தமிழோசை

## அரும்பு 2

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,
நேரியகுளம் வீதி,
நெளுக்குளம்,
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு – 2019
இரண்டாம் பதிப்பு – 2021
❖ நூலின் பெயர் – தமிழோசை
❖ அரும்பு – 02
❖ வெளியீட்டு ஆண்டு – 2021
❖ வெளியீடு – வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூர நோக்கு **Vision**

"தனித்துவம் மிக்க
பிரதேச சபையாக திகழ்தல்"

# பணிக்கூற்று **Mission**

"பொறுப்பினை செவ்வனே
நிறைவேற்றுவதற்கும் பிரதேச
மக்களுக்கு எம்மிடமுள்ள
வளங்களையும் ஆளணிகளையும்
பயன்படுத்தி மிக உச்ச சேவையினை
வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன்
செயலாற்றல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் செய்தி

2004 ம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியதிலிருந்து தொடச்சியாக இவ்வாசிப்பு மாத செயற்பாடுகள் எமது பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதிலும் இவ்வாறான சிறப்பு மலர் வெளியீடானது 2019ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருந்த போதிலும் துரதிஸ்டவசமாக 2020ம் ஆண்டு கொரோனா அச்சுறுத்தல் நிலை காரணமாக இவ்வெளியீடானது இடம்பெறாத போதும் 2021ம் ஆண்டிற்குரிய தமிழோசை அரும்பு-2 வெளியீட்டினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வாழ்க்கையை சிறப்பாக வாழ்வதற்கு வாசிப்பு துணை புரிகின்றது. என்பது நிதர்சனமான உண்மை இவ்வாறான வாசிப்பை நாம் மாத்திரம் வாசித்து பயன் பெறுவதோடு நின்றுவிடாது ஏனையோருக்கு பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பான ஆக்கங்களை உள்வாங்கி வெளிவரும் சிறப்பான படைப்பே இச்சிறப்பிதழாகும். இச்சிறப்பிதழ் சிறப்பான முறையில் வெளிவருவதற்கு பல்வேறு வகையிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு ஆக்கங்கள் தந்துதவியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ தவிசாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வவுனியா தெற்கு தமிழ்பிரதேச சபையின் தலைவர் ஆகிய நான் எனது சேவைக்காலத்தில் கொண்டாடப்படுகின்ற தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளிவருகின்ற "தமிழோசை" அரும்பு 2 எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாசிப்பு என்பது ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் நுகரப்படவேண்டிய சுவாசக்காற்றைப்போன்று முக்கியமானது. இவ்விடயத்தை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கிலேயே இவ்வாசிப்பு தொடர்பான கருத்தரங்குகள், போட்டிநிகழ்வுகள், சுவரொட்டிகள், பதாதைகள் போன்றன அச்சிடப்பட்டு பொது மக்கள் மத்தியிலும், மாணவர் மத்தியிலும் காட்சிப்படுத்தப்படுகின்றன. அத்தோடு இச்சிறப்பிதழ் அச்சிட்படுவதன் நோக்கமும் அதுவேயாகும்.

இச்சிறப்பிதழானது பல்வேறுபட்டோரின் படைப்புக்களையும் உள்வாங்கி வெவ்வேறான ஆக்கங்களால் உருவானதாகும். நவீன தொழிநுட்ப யுகத்திலே மங்கி வரும் வாசிப்பு பழக்கத்தை மிளிரச் செய்யும் சிறியதொரு முயற்சியாகும்.

ஆக்கங்களை வழங்கும் நோக்கிலேனும் பல்வேறுபட்ட விடயங்களை வாசிப்பின் மூலமாக உள்வாங்கி தெளிவான அறிவோடு ஆக்கங்கள் உருவாக்கப்படுகின்றன. இவ் ஆக்கங்களை வாசகன் ஒருவன் உள்வாங்கி நுகரும் போது தங்களது ஆற்றல்களையும் வெளி உலகுக்கு கொண்வரும் ஆர்வம் ஒவ்வொருவருக்கும் உருவாகும் எனவே இவ்வாறான சிறப்பிதழ்கள் மென்மேலும் சிறப்புற வெளிவருவதற்கு ஆசிகள் வழங்குவதோடு ஆக்கங்களும், ஆதரவும் வழங்கிய அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. தர்மலிங்கம் யோகராஜா,**
**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபையின் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2021 ம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்திற்கான நூல் வெளியீட்டிற்கு என்னுரையை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எமது சபையானது வவுனியா மாவட்டத்திலே பரந்த பிரதேசத்தைக் கொண்ட ஒரு சபையாகும். இச்சபைக்கு அறிவுக்கடலாகவும், இருகண்களாகவும் ஓமந்தை நூலகமும், கூமாங்குளம் நூலகமும் விளங்குகிறது. எமது நூலகங்கள் நிறைந்த அளவு வளங்களைக் கொண்டு இயங்காவிடினும், கிடைக்கின்ற வளங்களைக் கொணடு மிகச்சிறந்த சேவையை வழங்கி வருகின்றது.

எனினும் அதிகரித்து வரும் தொழில்நுட்ப மோகத்தினால் தற்போது நூலகங்களை பயன்படுத்துவது உலகளாவிய ரீதியில் அருகி வருகின்றமை நாம் அனைவரும் அறிந்த விடயமே. இப் பிரதிபலிப்பு எமது பிரதேசத்தையும் விட்டுவைக்கவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமே. எமது நூலகத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை குறைந்து வருகின்றமை என்னால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எமது வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்காகவே வாசிப்பு மாதம் பிரகடனப்படுத்தப்பட்டது. புத்தகம் வாசிப்பதால் புதிய சொற்களை, புதிய விடயங்களை எம்மால்அறிந்து கொள்ள முடியும். வரலாற்று சாதனையாளர்களின் புத்தகங்களை படிக்கும் போது அவர்கள் கடந்து வந்த பாதைகளை அறிய முடியும் இதன் மூலம் எமது வாழ்க்கையை திட்டமிட முடியும். பல தகவல்களை அறிய முடியும். வாசிப்பதால் மூளை படிப்படியாக வளர்ச்சியடையும். எமது படைப்பாற்றல் மற்றும் பேச்சுத்திறனையும் அதிகரிக்க முடியும்.

பல வரலாற்று சாதனையாளர்களை எடுத்துக்கொண்டோமேயானால் அவர்களின் சாதனைக்கும் பின்னால் புத்தக வாசிப்பு என்பது பின்புலமாகஇருக்கின்றமை நான் அறிந்த உண்மை. எனவே உங்கள் பிரதேசத்தில் உள்ள நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்துங்கள். தினந்தோறும் தினசரிப்பத்திரிகைகளை நூலகங்களில் வாசிக்ககூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மட்டுமின்றி ஏனையோருக்கும் பயன்படக்கூடியவாறான பத்திரிகைகள் மற்றும் மன அமைதியை ஏற்படுத்தக்கூடிய சஞ்சிகைகள், நூல்கள் என்பன பெற்றுக்கொடுக்க வழி செய்யப்பட்டுள்ளது. எனவே இவ் வாய்ப்புக்களை முழுமையாக பயன்படுத்துங்கள்.

இதனை விட நூலகத்தை வளப்படுத்த மேலும் என்ன செய்ய வேண்டும் என்பதை தெரிவித்தால் எம்மால் முடிந்தவற்றை செய்து தர தயாராகவுள்ளோம். இவ்வருடம் சுமார் 100,000.00 ரூபா செலவில் கூமாங்குளம் நூலகம் புத்தாக்கம் செய்யப்பட்டது அனைவரும் அறிந்ததே. இதனை விட பல இலட்சம் பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. எனவே இவ்வளங்களை முழுமையாக பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி. தெர்ஜனா சுகுமார்**
**செயலாளர்**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே


1. வீட்டுத்தோட்டமும் இயற்கை உணவும் 01
2. வாசிப்பு 03
3. நூலகத்தின் முக்கியத்துவம் 04
4. கடவுளின் படைப்பு 08
5. உயிர்க்கொல்லிக் கொரோனா 11
6. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை முன்பள்ளியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரம் 13
7. சிறந்த உள்ளூர் எழுத்தாளர் ஞா.ஜெகநாதன் அவர்களின் நேர்காணல் 14
8. கரும்பைப்போல் சுவைப்போம் 17
9. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் 19
10. இலங்கையின் இயற்கை எழில் நிறைந்த எங்கட கல்நாட்டின குளம் பூங்கா 20
11. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் 23
12. அன்னை 24




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் தோட்டமும் இயற்கை உணவும்

உணவே மருந்தாகும் காலம் போய் மருந்தே உணவெனும் நிலையில் நமது சமூகம் உணவை உட்கொள்கின்றது. ஒருவன் காலையில் எழுந்து அறக்கப்பறக்கச்சென்று தனது தொழிலில் ஈடுபடுகின்றான் அதெல்லாம் எதற்காக? ஒரு வேளை உணவிற்காகத்தான் மனிதனைத் தவிர்ந்த அனைத்து உயிர்களும் தனக்கான உணவைத் தானே தேடிக்கொள்கிறன. ஆனால் மனிதன் தான் தன் உணவிற்காக தன் சமூகத்தைச் சார்ந்து இருக்கின்றான். அத்தோடு அறிவியல் வளர்ச்சி காரணமாக போக்குவரத்து விருத்தியடைய வேறு நாடுகளில் இருந்து உடலுக்கு கேடு விளைவிக்கும் உணவுகளை பெற்றுக் கொள்கின்றான். இதனால் பல்வேறு உடலியல் ரீதியான பிரச்சினைகளை அனுபவிக்கின்றான். இதற்கெல்லாம் ஒரே தீர்வு வீட்டுத்தோட்டமே ஆகும்.

வீட்டுத்தோட்டம் என்று சொல்லும் போது நாம் வீட்டுத்தோட்டத்திலேயே நமக்கு தேவையான உணவை எந்த கிருமிநாசினிகளையும் பயன்படுத்தாது உற்பத்தி செய்து கொள்வது ஆகும். வீட்டுத்தோட்டத்திற்கு என புறம்பாக ஒரு இடத்தையே வினைத்திறனான முறையில் பயன்படுத்தி வீட்டுத்தோட்டம் செய்யலாம். இந்த வகையில் வீட்டுத்தோட்டத்தை மாடி வீட்டுத்தோட்டம், சாடி முறையிலான வீட்டுத்தோட்டம், ஏன் வீட்டில் உள்ள கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி கூட வீட்டுத் தோட்டம் அமைக்கலாம். வீட்டுக்கு வெளியே வீட்டுத்தோட்டம் அமைக்க இடம் இல்லை எனில் வீட்டின் மாடியில் மிகவும் சிறப்பான முறையில் வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கு பல வழிகள் உண்டு. அத்தோடு வீட்டுத்தோட்டம் அமைப்பது நம் சுய தேவைக்காக மட்டுமே அன்றி பணம் சம்பாதிக்க அல்ல எனவே இயற்கையாகவே உள்ள சேதனப்பசளைகளை பயன்படுத்தியே நாம் காய்கறிகளை விளைவிக்கலாம்.

வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கு நாம் குறிப்பாக நிலத்தில் அன்றி மாடியில் வீட்டுத்தோட்டம் அமைக்கும் போது அதற்கான சாடிகளை கூட பணம் கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை. வீட்டில் உள்ள பழைய டயர்கள், பழைய பொலித்தீன் பைகள் போன்றவற்றை கூட பயன்படுத்தலாம். தற்கால சமுதாயத்தைப் பொறுத்தவரையில் நம் சமூகத்தவர்களுக்கு வீட்டுத்தோட்டத்தை அமைப்பதில் ஆர்வம் இல்லை. அதைவிட நேரமும் இல்லை. ஆதலால் நம் சமூகத்தில் வீட்டுத்தோட்டச்செய் கையில் அவர்கள் ஈடுபடுவதே இல்லை ஆனால் ஒரு சிறிய நேரமாவது அதற்கென ஒதுக்க வேண்டும். குறிப்பாகச் சொன்னால் வறுமைக் கோட்டை கூட மாற்றும் தன்மை இந்த வீட்டுத்தோட்டத்திற்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் பெண்கள் தான் அதிக நேரம் வீட்டில் உள்ளவர்கள் ஆவர். எனவே ஒவ்வொரு பெண்ணும் தமது வசதிக்கு ஏற்றவாறு வீட்டுத் தோட்டத்தை அமைக்கலாம். இதனால் பணம் சிக்கனம் ஆகும்.

ஆனால் நவீனமாக பகட்டாக வாழ மனிதன் ஆசைப்பட்டு இயற்கையை பலி கொடுத்துவிட்டான். செயற்கையான வாழ்க்கைச் சூழல் மனிதர்களை நோயாளர்களாக மாற்றிவிட்டது, வருமானத்தின் பெரும்பகுதி மருத்துவத்திற்கே செலவிடப்படுகின்றது. மகிழ்வான குடும்ப வாழ்க்கை மறைந்து மரண பயத்துடன் வாழும் சூழலே காணப்படுகின்றது. கஸ்டப்பட்டு உழைத்து உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களையே நாம் வாங்கி உண்கின்றோம். அது மட்டுமன்றி நம் குழந்தைகளுக்கும் ருசியான உணவுகளை கொடுக்கின்றோம் என்று உடலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு விளைவிக்கும் உணவுகளை வாங்கி கொடுக்கின்றோம் சற்றேனும் இது பற்றி சிந்தித்தால் இதற்கான சிறந்த தீர்வு வீட்டுத்தோட்டமே ஆகும்.

நாம் வீட்டுத்தோட்டமுறையில் பல வகையான மரக்கறிகளை வளர்க்க முடியும் ஏன் பழவகைகளை கூட நாம் வளர்க்க முடியும் கத்தரி, வெண்டி, கீரை, மிளகாய், தக்காளி, பாகற்காய், பூசணி, புடலங்காய், மரவள்ளி, அவரை, அகத்தி, இஞ்சி, மஞ்சள், கறிமிளகாய், கோவா, பயற்றை, சுரைக்காய் இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வாறான வீட்டுத்தோட்ட பயிர்களுக்கான விதைகளைக் கூட நாம் விவசாய திணைக்களங்களில் இலவசமான முறையில் பெற்றுக்கொள்ளலாம். காய்கறி வகைகள் மட்டுமின்றி நாம் மலர்களை கூட வீட்டுத்தோட்ட செய்கையாக மேற்கொள்ளலாம். குறிப்பாக வீட்டுத் தோட்டத்தில் செய்கை பண்ணும் பயிர்களுக்கு கிருமி நாசினிகளை பயன்படுத் வேண்டிய அவசியம் ஏற்படாது. அவ்வாறு பசளைகளை பயன்படுத்துவது என்றால் கூட வீட்டில் உள்ள கழிவுகளை நாம் இலகுவான முறையில் பசளைகளாக மாற்றி அவற்றை நாம் உரமாக பயன்படுத்த முடியும் ஒட்டுமொத்தமாக கூறினால் வீட்டுத்தோட்டச் செய்கை மூலம் நாம் பலவகையான நன்மைகளை பெறலாம்.

வீட்டுத் தோட்டம் மூலம் தினம் தினம் புதிய காய்கறிகளை பெற்றுக்கொள்ளலாம். கிருமிநாசினிகள் அற்ற காய்கறிகளை பெறலாம், குறைந்த செலவில் கூடிய இலாபத்தைப் பெறலாம். சமூக நலன் கருதி கிருமிநாசிகள் அற்ற சுத்தமான காய்கறிகளை சந்தைகளுக்கு விற்பனை செய்யலாம். ஏன் நாம் கூட விற்பனை செய்யலாம். இவ்வாறு நன்மைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். தற்கால விஞ்ஞான உலகில் எம்மால் செய்ய முடியாதது எதுவுமே இல்லை. அந்த வகையில் எந்தப் பயிரை எவ்வாறு வளர்க்கலாம்? எவ்வாறு பராமரிக்கலாம்? என்பன பற்றிய பல விடயங்களை இணையத்தளம் மூலமே இலகுவாக அறிந்து கொள்ள முடிகிறது. வீட்டில் இருந்தபடியே இவை அனைத்தையும் அறிந்து மிகவும் சுலபமாகவும் நவீன முறையிலும் மேற்கொள்ள முடியுமாக உள்ளது.

தற்கால சூழலில் எம்முடைய அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக காணப்படுவது உணவாகும் உணவின்றி எந்த ஜீவனும் இந்த உலகில் உயிர்வாழ முடியாது அதுவும் மனிதன் உயிர்வாழவே முடியாது ஆனால் மனிதனுக்கு உணவு கிடைத்தும் அவன் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் உணவுகளையே உட்கொள்கின்றான் எதிர்காலத்தில் புற்றுநோய், நீரிழிவு, இதயநோய், அலர்ஜி, சிறுநீரக நோய், நரம்புத்தளர்ச்சி, நாட்பட்ட மலச்சிக்கல், போன்ற பல்வேறு உடல் உபாதைகளுக்கு உள்ளாகின்றான். இவை அனைத்திற்கும் ஒரு சிறந்த தீர்வாக அமைவது வீட்டுத்தோட்டமும் இயற்கை உணவுமே ஆகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முது மொழிக்கு அமைய இயற்கை உணவை உண்டு நோயற்ற வாழ்க்கையை வாழ்வோமாக.

**செல்வி. த.மதுர்ஜா**
**உயர்தரம்**
**வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பு

வாசிப்பின் விழி கடலின் ஓசை
ஆய்ந்தறிவதன் வழி அது இசை
ஓசை ஒருங்குபட இசைதோன்றும்
இசை தோன்றாத வரையிலும் ஓசை கேட்கும்

அறிவிற்குள் சென்று நல்
அறிவதை தேடு - நீ
அறிவது புத்தகத்தில் என்றால்
உனக்கு வாசிக்க கிடைத்துள்ளது
நீ அறிந்ததுதான் இப் புத்தகம் என்றால்
வாசிப்பிற்கு நீ கிடைத்துள்ளாய்

உருவாகும் போது கரு
உயிர் துடிக்கும் போது உடலி
உடலாகும் போது சிசு
உலகிற்கு வந்தால் குழந்தை
உலவும் போது பிள்ளை
உண்மையில் சிந்திக்கும் போது
மட்டுமே நீ மனிதன்.

சிந்தனையின் தொடக்கம் ஜனனம் - ஆதலால்
மரணத்தின் மறு பெயர்
சிந்தனையின் நிறுத்தற் குறி
நிதம் ஒன்றை வாசி
நிஜம் நன்றை யோசி
நிதம் உன்னில் ஜனனம்
நினைவிற்கு இல்லை மரணம்
வாசி, யோசி- ஆராய்ந்து
அதை விசுவாசி
அதுவே என் ஆசி

**சேவியர் அருமைநாயக் ஸ்ரீபன் இதயராஜ்**
**தொழில் நுட்ப உத்தியோகத்தர்**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகத்தின் முக்கியத்துவம்

"ஒரு நல்ல நூல் நிலையம் ஆன்மாக்கள் வாழும் புண்ணியஸ்தலம்" "ஒரு நூலகம் திறந்தால் ஆயிரம் சிறை கூடங்களை மூடலாம்" "அறிஞர்கள் கூடம் ஓர் உயிருள்ள வாசிகசாலை" "நிறைய நூல்களைப் படித்தவன் ஒரு நடமாடும் நூலகம்" இவ்வாறான சிறப்புக்களை எல்லாம் கொண்டிருக்கும் நூலகம் ஒவ்வோர் ஊருக்கும் அவசியம் இருந்திடல் வேண்டும் என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. அந்த வகையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தேசிய வாசிப்பு மாதம் தமிழோசை அரும்பு 2 என்ற நூலை வெளியிட முன்வந்திருப்பது மனமகிழ்வைத் தருகின்றது.

மேற்கூறிய நூலகத்தின் அருமை பெருமைகளை மனதிற் கொண்டு புத்தகம், வாசிப்பு, என்பன பற்றி பழமொழிகள் கூறும் கருத்துக்களை எடுத்து நோக்கலாம் என நினைக்கின்றேன். பழமொழிகள் என்பன பலரது பட்டறிவு, சிலரது பகுத்தறிவு இணைந்து ஒரு வரிக்கவிதையாக வந்து பலரது உள்ளங்களை பக்குவப்படுத்துகின்றன. இந்நிலையில் பழமொழியின் அருமை பெருமைகளை முதலில் பார்ப்போம்.

இருட்டில் வழிகாட்டும் தீவர்த்திகள் என்கிறது போஸ்னியா. பழமொழிகள் அனுவபவத்தின் குழந்தைகள் என்றும்

"உலகின் நல்லறிவுகளெல்லாம் பழமொழிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன". என்றும் கூறுகிறது இங்கிலாந்து.

"பழமொழி பொய்த்தால் பால் புளிக்கும்" என்றும் "பழமொழி மனுதனுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்து அவனைப் புதுப்பிக்கின்றது" எனச் சிறப்பிக்கிறது இந்தியா. "ஓர் அழகிய பழமொழி நினைவில் இருப்பது பணப்பெட்டியில் ஒரு பொற்காசு இருப்பதைப் போல" எனச் சுவீடனும், "ஒரு மிகச் சிறிய பழமொழியிலிருந்து பெரிய ஆறுதல் உண்டாகும். என்றும் "ஒரு மனிதனுடைய வாழ்வு ஒரு பழமொழியின் மேல் கட்டப்பட்டிருக்கின்றது." என பல்வேறு நாடுகளும் பழமொழியைச் சிறப்பிக்கின்றன.

உலக நாடுகளிலுள்ள மக்களின் வாழ்வோடு உணர்வையும் தொட்டு வரும் உயிர்மொழி பழமொழியாகும். எமது முன்னோர்கள் அதீதமாய் பிரயோகித்து அவர்களின் சந்தோசம் மற்றும் துயரங்களுக்கெல்லாம் மயிலிறகால் வருடிவிட்டு ஆறுதல்படுத்தும் சுகமொழி பழமொழியாகும்.

பழமொழிகளின் சிறப்புக்களை பல்வேறு அறிஞர் பெருமக்களும் பல்வேறு கருத்துக்களாகச் சொல்லி எம்மைச் சிந்திக்க வைத்துள்ளனர்.

"நீண்ட அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட சிறுவாக்கியங்கள் பழமொழிகள்" "பழமொழியைப் போல் வேறெதுவும் நினைவில் பதிவதும் நீண்ட நாள் தங்குவதும் இல்லை" - கில்பேட் பழமொழி என்பது பரந்த பொருளை சுருங்கிய சொல்லில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவதாகும்''- தாமஸ் புல். வியாபார உலகில் தங்க நாணயங்கள் எப்படியோ, அப்படிச் சிந்தனை உலகில் பழமொழிகள் அளவில் சிறியவை. எல்லா மக்களிடத்தும் புழக்கத்தில் உள்ளவை'' டி.மார்ச். பழமொழிகள் அணியாகவும் மகிழ்ச்சி ஊட்டுவனவாகவும் மட்டும் பயன்படுவதில்லை. அவைகள் வாழ்க்கைச் சிக்கலை அவிழ்த்து வழிகாட்டல் செய்கின்றன.'' பிரான்சிஸ் பேக்கன். ''ஆயிரம் நூல்களைக் கற்பதை விட அறிஞர்கள் கூறும் பழமொழிகள் அதிக அறிவைத் தரும்'' லவோட்டர். ''மணலில் முத்துக்களைப் போலவும் சுரங்கத்தில் தங்கத்தைப் போலவும் சரித்திரத்தில் பழமொழிகள் இருக்கின்றன. எராஸ்மஸ். பழமொழிகள் போல் மனதில் பாய்ந்து பதியக் கூடியவை வேறு ஏதுவுமில்லை.'' டீ.மூர்ரே. மேற்கூறியவை அறிஞர்கள் கூறியவை.

பல்வேறு நாடுகளும் பல்வேறு அறிஞர்களும் கூறிய அமுத மொழிகள் பழமொழிகள். இவை முதுமொழி, முதுசொல், மூதுரை, பழஞ்சொல், சொல்லடை போன்ற பெயர்களால் எல்லாம் அழைக்கப்படுகின்றன. இந்நிலையில் புத்தகம் வாசிப்பு தொடர்பாக சொன்னவற்றைக் கவனத்தில் கொள்வோம்.

''உலகமே உயர்ந்த புத்தகம்'' என்கிறது இந்திய நாட்டுப்பழமொழி. உயர்ந்த மனிதன் அமைதியாக இருப்பான் என்பர். புத்தகமும் ஆயிரமாயிரம் கருத்துக்கள் உள்ளிருப்பினும் மூடிக்கொண்டு அமைதியாய்த்தானே இருக்கின்றது. அந்த அமைதியை நாங்களும் பெற்று அமைதியாய் இருந்து உயர்ச்சியடைவோம். ''ஒரு நல்ல புத்தகம் ஒரு நல்ல நண்பன்'' என்கிறது இத்தாலி நாட்டுப் பழமொழி. உண்மையில் ஒருவனை அறிய வேண்டுமாயின் அவனுடைய நண்பனை முதலில் அறிய வேண்டும் என்பர். அதே போல் நல்ல நண்பன் எப்படி ஒருவனுக்கு உண்மையானவனாக, நேர்மையானவனாக இருப்பானோ, அவ்வாறே ஒரு புத்தகமும் நேற்று ஒன்றைக் கூறி, இன்று ஒன்றைக் கூறி, நாளை ஒன்றைக் கூறாது எப்போதும் ஒன்றையே கூறும் நல்ல நண்பனைப்போல. இதனை அங்கீகரிக்கும் வகையில் நம்மை மோசம் செய்யாத ஒரே நண்பன் புத்தகம்'' என பிரான்ஸ் நாடு கூறுகிறது.

''புத்தகங்களின் தோற்றம் உள்ளத்திலிருந்து கவலைகளைப் போக்குகிறது'' என்கிறது அராபிய நாட்டுப்பழமொழி. மனிதனைப் புனிதமாக்கும் வேள்விக்கூடம் புத்தகசாலை என்பர்.புத்தகசாலைகள் (நூலகங்கள்) நோக்கி நாங்கள் போக வேண்டும். எங்களைப் புனிதராக்கும் வேள்விக்கூடம் நூலகமும் அங்குள்ள நூல்களுமே. நீ நூலைத்தேடு, உலகம் உன்னைத் தேடும் என்று கூறப்படுகிறது. நூல்களைத் தேட நூலகம் செல்ல வேண்டும்.

புத்தகம் என்பது நாம் படித்து, நம் குழந்தைகள் படித்து, எமது அடுத்த தலை முறையும் படிக்க உதவுவது என்பதை மனதில் கொள்ள வேண்டும். இந்நிலையில் புத்தகங்களைப் பொக்கிஷமாய்ப் பேணப்பழக வேண்டும்.

''ஐயம் நீங்க அளவிலா நூலைத் தேடு'' என்கிறது இந்திய நாட்டுப் பழமொழி நூலளவேயாகுமாம் நுண்ணறிவு என்றும் பாடம் ஏறினும் ஏடது கைவிடேல் என்றும் நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். ''நான்கு புத்தகங்கள் வைத்திருப்பவனுக்கு நான்கு கண்கள்'' என்கிறது பாரசீக நாட்டுப் பழமொழி. ஒவ்வொருடைய வீட்டிலும் ஒவ்வொரு நூலகம் இருக்க வேண்டும். நூலைத் தேடு சீரைத் தேடு என்பர். வாசிப்புப்பழக்கம் அருகி விட்டது. நூலகங்களுக்குச் செல்பவர்களும நூலைத் தேடி படிப்பவர்களும் மிகவும் குறைந்து விட்டனர். கோடிக்கணக்கான அறிவுரைகளைத் தந்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள் நூலகங்களில் தூசு படிந்து கிடக்கின்றன. வாசிப்பதில்லை யோசிப்பதுமில்லை என்ற நிலை காணப்படுகின்றது. அறியாமை அகல ஆற்றாது படி என்றார்கள் அறியாமையே பெரிய தகுதியாக நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நாம் அறிந்திருப்பதை அறிந்திருக்கின்றோம் என்றும் நாம் அறியாததை அறியவில்லை என்றும் அறிந்து கொள்வது தான் உண்மையான அறிவு என்று கூறுகிறார்கள். கல்லாத அரசன் கழுதைக்குச் சமன் என்று கூறுவார்கள். அரைகுறைப்படிப்பு ஆபத்தானது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எழுதப்படிக்க தெரிந்தவர்களுக்கு நான்கு கண்கள் என்று கூறுகிறது ஆல்போனிய நாட்டுப் பழமொழி. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்றார் ஔவையார். ஔவை சொல் அமிர்தம் என்பதும் ஔவை வார்த்தைக்கு அச்சமில்லை என்பதுவும் எத்தனை பேர் அறிந்து வைத்திருக்கின்றோம். எண் இல்லாதவன் கண் இல்லாதவன் என்றும் எழுத்தில்லாதவன் கழுத்தில்லாதவன் என்பதன் அர்த்தத்தை நாம் புரிந்த கொண்டோமா? நல்ல மாணவன் நாட்டின் செல்வம். நல்ல மாணவனை யார் உருவாக்குவது?

ஒரு பிள்ளைக்கு (மாணவனுக்கு) பெற்றோர் வீட்டிலுள்ள ஆசிரியர்கள் என்றும் ஆசிரியர்கள் பாடசாலையிலுள்ள பெற்றோர்கள் என்றும் கூறப்படுகின்றது. இதனைப் பெற்றோரும் ஆசிரியரும் உணர்ந்து கொண்டால் நாட்டின் செல்வம் பெருகும். ஆனால் இன்று இரண்டும் இல்லாத நிலை. முன்மாதிரியாக வாசிப்போராக பெற்றோரும் இல்லை. ஆசிரியர்களும் இல்லை. பிள்ளைகளுக்கு பிறந்த நாளுக்கு, வேறு விசேட தினங்களுக்கு நூலைப் பரிசளிக்கும் நிலை காணப்படுகின்றதா? இந்தக் கலாசாரம் வளர்க்கப்பட வேண்டும். இந்தப்பண்பாடு பேணப்பட வேண்டும். ஆனால் யாருமே இதனைச் செய்வதில்லை. விளைவு வாசிப்பும் யோசிப்பும் அற்ற சமூகமே....

அன்று வகுப்பறையே உலகம். இன்று உலகமே வகுப்பறை என்கிற நிலமை ஏற்பட்டுவிட்டது. தகவல் தொழிநுட்ப வளர்ச்சி ஜெட் வேகத்தில் முன்னேறிக்கொண்டு இருக்கிறது. மருத்துவம் பொறியியல், பௌதீகவியல், பொருளாதாரவியல், முதலிய பல்வேறு துறைகளும் பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. இந்நிலையில் கல்வி அறிவு என்பன. வகுப்பறையில் மட்டுமே கிடைப்பது போதாது. ஒவ்வொருவரும் தானே தேடிக்கொள்ள வேண்டும். கற்றலின் பரிமாணங்கள் மாற வேண்டும். கற்றலுக்கு கற்றல் என்ற எண்ணக்கரு முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. இதனை ஏழாம் அறிவு என்றும் குறிப்பிடப்படுகின்றது. இந்நிலையில் மாணவன் கற்றலுக்கு கற்றல் என்ற செயற்பாட்டுக்கு தன்னை தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்நிலையில் தான் நூல்களின் அவசியமும் வாசிப்பின் தேவையும் நூலகத்தின் இன்றியமையாமையும் உணரப்பட வேண்டும். புத்தகம் கையில் ஏந்தக்கூடிய ஒரு கடவுள் நேற்று இறநதவனையும் இன்று இருப்பவனையும், நாளை பிறப்பவனையும் இணைக்கின்ற ஒரு கருவி. அந்தக் கடவுளை எங்கள் கைகளில் ஏந்த வேண்டும். அந்தக் கருவியை நாம் முறைப்படி பயன்படுத்த வேண்டும். அந்தக் கருவி கிடைக்கும்இடம் நூலகம் தான். எனவே நூலகப் பயன்பாட்டைத் தொடங்குங்கள்.

புத்தகம் - யாரோ செய்த தவத்தால் நாங்கள் பெற்ற வரம் என புதுக்கவிதை ஒன்று கூறுகிறது. உண்மையில் புத்தகம் என்பது உங்கள் கரங்களில் விரிந்திருக்கிறது. அது நீங்கள், செய்யாத அதேவேளை யாரோ ஒருவர் செய்த கடுந்தவம். என்பதை ஒரு கணம் சிந்தித்து பாருங்கள். நூலகத்தில் உள்ள புத்தகங்கள் எவ்வளவு அரிய பெரிய வரம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். கல்வி இல்லாத வாழ்வு என்பது மணம் இல்லாத பூவுக்குச் சமம். என்று பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப் பழமொழி கூறுகின்றது. அறிவுடையோரை அரசனும் விரும்புவான் என்று இந்தியப் பழமொழி குறிப்பிடுகிறது. அகப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி என்பர். இவை எல்லாம் கல்வியின் மகத்துவம் உணர்த்துகின்றதல்லவா? கற்பதற்கு அறிவை பெறுவதற்கு கற்றலுக்காகக் கற்பதற்கு தயாராகுங்கள். இருபத்தோராம் நூற்றாண்டு ஏழாம் அறிவைத்தான் எதிர்பார்க்கின்றது. பகுத்தறிவென்றும் ஆறாம் அறிவைப் பெற்றவர்களே கற்றலுக்காக கற்றல் எனும் ஏழாம் அறிவை பெற்றுக்கொண்டால் தான் இனி உலகம் உங்கள் வசப்படும்.

நிறைவாக பிரதேசத்திற்கொரு நூலகம் என்பதோடு வீட்டுக்கொரு நூலகம் பேணப்பட வேண்டும். இன்று நவீன கைத்தொலைபேசிகளும், இணைய வழி தொடர்பாடல்களும், கைக்குள் உலகம் என்ற நினைப்பும் பெரும்பாலானோர்க்கு இருப்பினும் பல்வேறு பட்ட வசதிகளும் வாய்ப்புகளும் வந்து குவிந்தாலும் நூல் போல் வினைத்திறனாய் ஒரு கருவிக்கு நிகர் ஏதுமில்லை. இந்தப்புத்தகங்கள் பல ஒரே இடத்தில் பெறக்கூடிய வசதியைத் தரும் நூலகம் போல் வேறு எதுவுமில்லை. வாசிகசாலை என்று குறிப்பிடுவதற்கு அர்த்தம் இச்சாலையின் ஊடாக வாசிப்புப்பயணம் மேற்கொள்ளுங்கள் என்பதாகவும் இருக்கலாம். நாங்கள் போகும் சாலை (பாதை) நல்லதாக அமைய வாசிக சாலையில் நாம் பயணிப்போம். வாசிப்பையே சுவாசிப்பாக கொள்வோம்.

**ந.பார்த்தீபன்**
**ஓய்வு நிலை உப பீடாதிபதி,**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுளின் படைப்பு.

சுவேதா பாடசாலை விடுமுறை நாட்களில் வீட்டில் நிற்கும் போது கோயில் கட்டுதல், மரஞ் செடிகளுக்குப் படிப்பித்தல், சைக்கிள் ஓடுதல் என்று தன் பொழுதினை செலவிடுவாள். அவளுடன் பூனைக்குட்டி பொம்மை ஒன்று எப்போதுமே இருக்கும். சாப்பிடும் போது, தூங்கும் போது, ஏன் குளிக்கும் போதும் அந்த பொம்மையுடன் தான் குளிப்பாள். இதனை அவளின் தந்தை பலமுறை அவதானித்திருக்கிறார்.

விவசாயியான சுவேதாவின் தந்தை நாதன், ஒருநாள் மரக்கறி கொண்டுபோய் சந்தைக்கு கொடுத்துவிட்டு வரும்வழியில் ஒரு பூனைக்குட்டி நிற்பதைப் பார்த்து, அதனை தன் மகளுக்காக பிடித்துக்கொண்டு வந்தார். நாதன் பூனைக்குட்டியை வீட்டுக்குக் கொண்டுவந்தது, சுவேதாவின் தாய் ராணிக்குப் பிடிக்கவில்லை.

செல்லப் பிராணிகளை வீட்டில் வளர்த்தால் அவை வீட்டை அலங்கோலமாக்கிவிடும், அதிலும் குறிப்பாக பூனையின் ரோமத்தினால் பல நோய்கள் ஏற்படும் என்ற எண்ணமுடையவள் ராணி.

சுவேதா பாடசாலைக்குச் சென்றவேளையில் பூனைக்குட்டியை வீட்டுக்கு கொண்டுவந்த நாதன், ராணியிடம் முறையான திட்டுவாங்கிக் கொண்டார். மகள் வீட்டில் இல்லாததால் மனைவியின் கடிதல் கணவன் மீது அதிகமாகவிருந்தது. ஆனாலும் பூனைக்குட்டி சுவேதாவுக்குப் பிடிக்கும் என்ற ஒரேயொரு காரணத்தால் நாதன், மனைவியின் திட்டுக்களை காதில் போட்டுக் கொள்ளவில்லை.

பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்த சுவேதா, சாமியறைக் கதவுக்குப்பின்னால் ஒழிந்தபடி அழுதுகொண்டிருந்த பூனைக்குட்டியைக் கண்டதும் தாயிடம் ஓடிச்சென்று,

“அம்மா இது யாரிண்ட பூஸ்குட்டி? எங்களுக்கா??” என்றாள்.

அதுக்குத் தாய், “உன்ர கொப்பருக்கு வேற வேலையில்ல. றோட்டில கிடக்கிறதுகளையெல்லாம் வீட்டுக்கு கொண்டுவாறார். தோட்டத்தைக் கொத்திக்கொத்தி மண்வெட்டி போல புத்தியும் மங்கிப் போட்டுது போல” என எரிச்சலுடன் புறுபுறுத்தாள். பதிலுக்கு எதுவும் கூறாத சுவேதா, வீட்டுக்குப் பின்பக்கமுள்ள வாழைக்கன்றுகளுக்கு நீர் இறைத்துக் கொண்டிருந்த தந்தையிடம் ஓடிச் சென்று,

“அப்பா… அப்பா…“

“செல்லம்! அப்பா இங்க நிக்கிறன்… ஸ்கூலால வந்திட்டிங்களா”

“ஓ இப்பதான் வந்தனான். அது யாரின்ட பூஸ்குட்டி? இனி எங்கட வீட்டையா இருக்கும்???”

“ஓம் சுவேதாக்குட்டி. அது எங்கட வீட்டதான் இருக்கும். அப்பா உங்களுக்காகத்தான் சந்தைக்குப் போயிட்டு வரேக்க பிடிச்சுக் கொண்டு வந்தனான். பிள்ளைக்குப் பிடிச்சிருக்கோ”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமப்பா.... எனக்கு நல்லாப்பிடிச்சிருக்கு. அதுக்கு வடிவான கண். குட்டி மூக்கு, பஞ்சுக் கால். நான் இனி பூஸ்க் குட்டியோடதான் விளையாடுவன். அப்பா அது கத்திக்கொண்டே நிக்குது. தூக்கினாக் கடிக்குமா?"

"இல்லைத் தங்கம். அது இண்டைக்குத்தனே எங்கட வீட்ட வந்தது. அதுதான் பயந்து போயிருக்கு. இன்னுங் கொஞ்ச நாளில அது உங்களோடு நல்ல ப்ரண்ட் ஆகிடும். நீங்க போய் மெதுவா தூக்குங்கோ. அது ஒண்டும் செய்யாது. ஆனா பூனைமயிர் வாய்க்குள்ள போகாம விளையாட வேணும் சரியா...!"

"சரி...." என்று கூறிக் கொண்டு வீட்டுக்குள் குதித்துக் குதித்து ஓடிய சுவேதா பூனைக்குட்டியைத் தூக்கப் போனாள். அதைக் கண்ட ராணி,

"அடியேய் அதைக் கையால அளையாதடி. பூனைமயிர் சாப்பாட்டோட போய்த்தான் பக்கத்துவீட்டுக் குமுதாவுக்கு வருத்தம் வந்தது."

"குமுதா கைகளுவாமச் சாப்பிட்டிருப்பாள். அதுதான் அவளுக்கு வருத்தம் வந்தது. நான் விளையாடத்தான் அப்பா பூஸ்குட்டியைக் கொண்டு வந்தவராம். நான் தூக்குவன்"

"நான் சொல்லச்சொல்ல கேக்க மாட்டியோ? பொறுவாறன்" என்று சொல்லிக் கொண்டு பூமரத்திலிருந்து தடியொன்றைத் தாய் முறிக்க, சுவேதா வீட்டுக்கு வெளியே ஓடிவிட்டாள். ராணி முறித்துவந்த குச்சியால் பாவம் பூனைதான் கடைசியாக அடிவாங்கியது.

தாய் கவனிக்காத நேரம் பூனைக்குட்டியைத் தூக்குவது, தன் சைக்கிள் கூடைக்குள் பூனையை ஏற்றிக்கொண்டு வட்டமிடுவது, தன் சாப்பாட்டில் ஒரு பங்கைப் பூனைக்குட்டிக்காக ஒதுக்குவது என பூனையை அன்பாக வளர்த்த சுவேதா அதற்கு கண்மணி என்று பெயரும் வைத்தாள்.

கண்மணியும் சுவேதாவை விட்டு ஒரு கணங்கூடப் பிரியாது. சுவேதா உறங்கும் போது அவளின் காலுக்கு கீழ் படுத்துக்கொள்ளும். காலையில் தன் தலையால் உரசி அவளை நித்திரையால் எழுப்பும். சுவேதா பாடசாலைக்குப் போகும்போது அவளுக்குப் பின்னால் கொஞ்சத்தூரம் நடந்து செல்லும். அவள் வீட்டுக்கு வரும்வரை வாசலிலேயே தவங்கிடக்கும்.

இப்படியே இரண்டு வருடம் கடந்தது. சுவேதாவின் வீட்டு வளவினுள் நிறையத் தென்னை மரங்கள் உள்ளன. அதில் ஒரு மரத்தில் காணப்பட்ட துவாரத்திற்குள் கருக்குருவிகள் இரண்டு கூடுகட்டி வாழ்ந்து வந்தன. பெண் குருவி மூன்று முட்டைகளை இட்டிருந்தது. அதிலிருந்து சில தினங்களில் குஞ்சுகள் வெளிவந்தன. அந்த தென்னை மரத்தின் கீழ் கதிரையை வைத்து ஏறி, அந்தக் குஞ்சுகளைத் தாய்க்குருவி காணதபோது பார்ப்பதும் சுவேதாவின் அன்றாடக் கடமைகளில் ஒன்றாகும்.

பாடசாலை விடுமுறை நாளன்று, நாதன் தோட்டத்தில் நிற்கும் போது சுவேதா தொலைக்காட்சியில் பாடலை அதிக சத்தமாக ஒலிக்கச் செய்துவிட்டு வீட்டினுள் படுத்திருந்தாள். தாய் சமையல் வேலையில் மும்முரமாகவிருந்தாள். தாய்க் குருவி பெருத்த ஒலியில் அலறிய போதிலும் அதனை யாரும் செவிமடுக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு ஒப்படை செய்யத் தொடங்கிய போதுதான் சுவேதாவுக்குச் சத்தங்கேட்டது. அவள் ஓடிச்சென்று பார்தபோது, மூன்று குஞ்சுகளையும் வேட்டையாடிவிட்டு, நாக்கால் வாயைத் துடைத்தபடி மரத்திலிருந்து கீழே இறங்கியது கண்மணி. இப்படியொரு தருணத்தை சற்றும் எதிர்பார்த்திராத சுவேதா, கண்ணியின் செயலைப் பார்த்து சினங்கொண்டு, தடியொன்றை எடுத்து பூனைக்கு கடுமையாக அடித்தாள். அந்த வேகத்திலேயே தாயிடம் சென்று,

"அம்மா...! பொந்துக்குள்ள இருந்த குஞ்சுகளையெல்லாம் கண்மணி திண்டிட்டுது. அதுக்கு இனிமேல் சாப்பாடு போடாதேங்கோ..."

"இதுக்குத்தான் நான் அண்டைக்கே படிச்சுப் படிச்சுச் சொன்னனான். தேப்பனும் பிள்ளையும் என்ர பேச்சைக் கேட்டியளோ? இப்ப என்ன நடந்தது பாத்தியே?" என்றாள் ராணி.

"பாவம் அந்த குஞ்சுகள் எவ்வளவு துரம் அழுதிருக்கும். நான்தான் சாப்பாடு போடுறனே பிறகேன் அதுகளைத் திண்டனி" என்று சொல்லிச் சொல்லி பூனைக்கு தன் ஆத்திரம் குறையும்வரை அடித்தாள் சுவேதா.

மூன்று நாட்களுக்கு மேலாக பூனைக்கு சுவேதா சாப்பாடே கொடுக்கவில்லை. அது தனக்கு கிட்டவரும் போதெல்லாம் அடித்துக் கலைத்தாள். ஆனால் திடீரென ஒருநாள் பாடசாலையிலிருந்து வந்து உடுப்புக் கூட மாற்றாது சுவேதா பூனையை தேடிச்சென்று தூக்கினாள். அதை அவதானித்த ராணி, சுவேதாவிடம்,

"என்னடி சுவேதா! ஏதோ இதுக்கினி சாப்பாடு போடக்கூடாது, அடியடா பிடியடா எண்டு அண்டைக்குக் கத்தினாய். பிறகேன் அந்தச் சனியனை இப்ப துக்கிக் வச்சிருக்கிறாய்?"

"அம்மா! கண்மணியை சனியன் எண்டு பேசாதேங்கோ... அது பாவம். வேணுமெண்டா குருவியளைப் பிடிச்சுத் திண்டது? அதின்ர சுபாவமே வேட்டையாடிச் சாப்பிடுறதுதானே. அதை நான் வீட்டில வளக்கிறன் எண்டதுக்காக மனிசர் மாதிரி சமைச்ச சாப்பாட்டைச் சாப்பிட்டு இரெண்டு சொல்லலாமா? கடவுள் எந்தெந்த குணத்தில எல்லாத்தையும் படைக்கிறாரோ அந்தந்த குணத்திலதான் அதுகள் இருக்கும். அதை யாராலும் முழுசா மாத்தேலாது. இதைத் தான் ரீச்சரும் இன்டைக்குச் சொன்னவா. "

"என்னவோ போ... எனக்கிதைப்பற்றித் தெரியாது. இனியும் இந்தப் பூனை இப்பிடியேதாவது செய்யத்தான் போகுது. அப்ப பாப்பம் இந்த வியாக்கியான மெல்லாம் எங்க போகுதெண்டு?"

"அதையும் பாப்பம்.... நான் இனி என்ர செல்லத்துக்கு அடிக்கமாட்டன். நீங்களும் அதுக்கு அடிக்கக் கூடாது." என்று சொன்ன சுவேதா, தோட்டத்தில் நின்ற தந்தையிடம் சென்றாள். கண்மணியும் அவள் பின் பாசமாக ஓடியது.

**ஆக்கம் :**
**திருமதி. சந்திரகாந் ஹபிலா**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா

சீனாவில் தோன்றிய வைரசினால் அன்றோ - இவ்வுலகில்
சீக்காளி ஆகினரே சின்னஞ்சிறார் கூட
பெற்ற பெற்றோரோ பெயர் வைத்த உறவினரோ
பேருக்காயினும் கொஞ்சுதலும் குற்றமாமே சட்டமதில்
பெற்ற பிள்ளையை கொஞ்சுதற்கும் பேமிஷன் கேட்பதென்றால்
பேதமாய் தோன்றுமடா பெற்ற பேதையின் நெஞ்சமதில்

முகத்துக்கொரு கவசம் அதுவும் முறையாக அணிந்திடலேல்
மூச்செடுக்க இயலாமையால் மூர்ச்சையாகிப் போயிடுவர்
உறவுகள் ஒன்று கூடி ஒப்பாரி வைத்தாலும்
ஒருவரும் அருகில் கூட செல்லுதற்கு இயலாதாம்.
இப்படி ஓர் இயலாமை இனிவரும் காலங்களிலும்
எவருக்கும் வாராதிருக்க இறைவனை வேண்டுகின்றோம்.

ஓரடி தள்ளி நின்று பழகுவதே ஒழுக்கமென
கொண்டாடும் காலமிது கலிகாலம் தற்காலம்
இருப்பதெல்லாம் இல்லாதோருக்கு ஈகை செய்யும் காலம் போய்
இருந்தாலும் இல்லை என்று சொல்லுவதே இயல்பாகிப் போனதடா.
இதில் எல்லோர் நன்மையும் பாதுகாக்கும் என எண்ணும்
இரக்க குணமும் சேர்ந்து இணைந்துகொண்டதடா.

இல்லம் நாடி வருவோரை இன்முகத்துடன் வரவேற்கும் காலம் போய்
எட்ட நில் கிட்டே வராதே என இயம்பாமல் இயம்புகின்ற
எல்லோரையும் தூர நிறுத்தும் நாகரீகமே
இக்காலத்தில் இருவருக்கும் நன்மை பயக்கும் என்பதாம்.
இனி இதில் பார்ப்பதற்கென்ன பழியும் பாவமும்
இதுகூட பழகி விட்டதடா நம் பாரினிலே.

காவிகளான தொற்றுக் கிருமியினால் பரிதவிக்கும்
பாவிகளாய் மாற்றப்பட்டோர் இப்பாரினிலே உள்ளோர் எல்லாம்
பாதுகாப்பாய் இருப்பதற்கு பலமுறை முயன்றாலும்
ஒருமுறை விடும் தவறும் உயிரையே மாய்த்திடுமாம்
மாற்றம் ஒன்று மாத்திரம் வந்துவிடேல்
மாறிப்போகும் இவ்வுலகம் சுடுகாடாய் என்பதுவும் தூரமில்லை

நானே பெரியவன் என்றுரைத்து மமதையிலே
மானிட சமூகமதை மண்டியிட வைத்துவிட
இருக்கிறேன் ஒருவன் அவன் தான் நான்
இயற்கையின் உறைவிடமான இறைவன் என்பதனை
பலபேரும் இப்பாரினிலே ஏற்றுக்கொள்ளும் காலமதை
பார்திருக்க காட்டிவிட்டான் படைப்பாளி இறைவன் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவோ கோடிகளை இறைத்திங்கு தேடுகிறார்
இந்நோய்க்கு தடுப்பு மருந்தொன்றை கண்டிடவே
எவ்வளவோ முயன்றிங்கு பார்த்திருந்தும் இல்லையாமே
இந்நோய் நீங்குதற்று மருந்தொன்று இவ்வுலகில்
இயலுமானவரை எல்லோரையும் பாதுகாத்திட
எவ்வளவோ போராடும் இன்றைய விஞ்ஞானம்.

ஊருக்கும் இவ்வுலகில் வாழ்வோருக்கு உணர்த்தி வைக்க
உருவாக்கப்பட்டதுவோ இவ் உயிர் கொல்லி நோய் - என
எண்ணுமளவிற்கு இற்றைக்கு இவ்விடயம்
இயம்புவோன் பலர் இருப்பர் என்பதுவும் கண் கூடே.
இனியேனும் இவ்வாறான சாபங்கள் - இடம்பெறாமல்
இன்பமாய் வாழ்வதற்கு இறைவனை வேண்டிடுவோம்.

**திருமதி சீதாலட்சுமி தெய்வேந்திரன்**
**நூலகர்,**
**கூமாங்குளம் பொது நூலகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரம்

| தொ. இல | மாணவர் பெயர் | முன்பள்ளியின் விபரம் |
|---|---|---|
| 01 | மு.தேனுகா | முத்தமிழ் முன்பள்ளி |
| 02 | ச.சஞ்சனா | நெளுக்குளம் பாலர் பாடசாலை |
| 03 | மோ டார்மிகா | பரிலூக்கா முன்பள்ளி |
| 04 | பிரதீபன் பகிரசன் | கந்தபுரம் சிறுவர் பாடசாலை |
| 05 | ராமச்சந்திரன் டவிசன் | பூவிழி முன்பள்ளி |
| 06 | சண்முகராசா சாமிவேல் | அன்னை தெரேசா முன்பள்ளி |
| 07 | பகிரதன் வர்ஷன் | ஐங்கரன் முன்பள்ளி |
| 08 | சிறீசங்கர் நவிசாந் | விவேகானந்தா முன்பள்ளி |
| 09 | ஞானசுந்தரம் பவிக்சா | சித்திவிநாயகர் முன்பள்ளி |
| 10 | அன்சிஹா பீலிப் | விநாயகர் முன்பள்ளி |
| 11 | கிரிசாந்தன் நேகன் | வாணி முன்பள்ளி |
| 12 | சில்வெஸ்டர் ஐசாக் செமிஸ்டர் | ஜெப ஆலய மிசன் முன்பள்ளி |
| 13 | மகேஸ்வரன் டிசானி | இளந்தளிர் முன்பள்ளி |
| 14 | சிவகுமார் சனுஜன் | கூமாங்குளம் புனித அந்தோனியார் முன்பள்ளி |
| 15 | க.கேதுஜா | ஓமந்தை பிரதேச சபை முன்பள்ளி |
| 16 | ஜெகத் புஸ்பகுமார் கிரிஸ்டினா | மலரும் அரும்புகள் முன்பள்ளி |
| 17 | விவேகனாதன் புஸ்பகாந்த் | கணேசா முன்பள்ளி |
| 18 | கஜன் நிஸ்விதா | சிவாலய முன்பள்ளி |
| 19 | மனோகரன் விதூர்சன் | சரஸ்வதி முன்பள்ளி |
| 20 | சுஜிராஜ் ரித்திகா | பெரியார் முன்பள்ளி |
| 21 | சசுசிகரன் யுசானா | உமையவள் முன்பள்ளி |
| 22 | சரவணமுத்து சுஜந்தன் | நவஜோதி முன்பள்ளி |
| 23 | மைக்கல் சுக்ரினா | மலரும் மொட்டுக்கள் முன்பள்ளி |
| 24 | ஜயசீலன் அனுஹாஸ் | உதயசூரியன் முன்பள்ளி |
| 25 | பரமேஸ்வர ராஜா ரிதுர்சன் | விண்மீன் முன்பள்ளி |
| 26 | யோகேந்திரன் தஸ்வின் | மலரும் மொட்டுக்கள் முன்பள்ளி |
| 27 | மோகன் ராஜ் ஜஸ்வினி | இளங்கதிர் முன்பள்ளி |
| 28 | யோகநாதன் கேஷா | திருமகள் முன்பள்ளி |
| 29 | K.M.எனோஸ் ஆதித்யா | சென்சுலான் முன்பள்ளி |
| 30 | தீ.நிவேதிகா | நாகபூசணி அம்மன் முன்பள்ளி |
| 31 | லிங்கேஸ்வரன் சுஜித்தா | கலைமகள் முன்பள்ளி |
| 32 | தினேஷ் கபீஷன் | செந்தமிழ் முன்பள்ளி |
| 33 | கஜேந்திரன் டிக்சனா | யேசுபுரம் முன்பள்ளி |
| 34 | தேவநேசன் டிர்சாந்தன் | சிறீ துர்க்கை அம்மன் முன்பள்ளி |
| 35 | அமலதாஸ் நந்துஜன் | தூய பற்றிமா மாதா |
| 36 | இ.கீர்த்திகா | சாரதா இளங்கதிர் முன்பள்ளி |
| 37 | மதுசன் ரிசோன் | தென்னிந்திய திருச்சப முன்பள்ளி |
| 38 | அருள்ராஜ் சன்சிகன் | அம்பாள் முன்பள்ளி |
| 39 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த உள்ளூர் எழுத்தாளர் ஞா.ஜெகநாதன்
(ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி பணிப்பாளர்)
## அவர்களிடம் நேர்காணல்

நாகர் எழு வன்னி, பேரும் ஊரும் ஆகிய வரலாற்று நூல்களை வெளியிட்ட ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளரும் சிறந்த உள்ளூர் எழுத்தாளருமாகிய ஞானப்பிரகாசம் ஜெகநாதன் ஆங்கிலம், இந்து நாகரீகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடத்துறைகளில் சிறப்பு தேர்ச்சி பெற்றவர். ஆங்கில மொழியாற்றல் படைத்தவர். கடந்தகால வரலாற்றை தேடி அதனை எதிர்கால சந்ததிக்கு வழங்க துடிப்புடன் ஈடுபட்டு வரும் இலக்கிய படைப்பாளி.

வவுனியா நெளுக்குளத்தில் வசித்து வருகின்றவர். சிறுகதை, கட்டுரைகள், வரலாற்று நூல்களை எழுதி வருகின்ற இவ் மூத்த கலை இலக்கிய படைப்பாளியை வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சிறந்த உள்ளூர் எழுத்தாளராக கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றது.

இவர் எமக்கு தந்துதவிய சிறந்த வரலாற்றுகளின் ஊடாக இவரது எழுத்தாக்க திறனை அறிய முடிகிறது படைப்பின் ஊடாக இவரது ஆளுமைகளை பகிரும் நோக்கில் நேர்காணலை மேற்கொண்டிருந்தேன்

**கேள்வி- வணக்கம் ஐயா நீங்கள் இலக்கிய துறையில் எவ்வாறு ஆர்வம் கொண்டீர்கள்?**

**பதில் -** ஆரம்பத்தில் படிப்பதில் எனக்கு விருப்பமில்லை விவசாயத்தில் அதிக ஆர்வம் இருந்தது எனது தந்தையின் இறப்பிற்கு பின்பு எனது உறவினர்களின் ஆதரவுடன் கல்வியில் அதிக நாட்டம் கொண்டு படித்தேன் இலக்கிய துறையில் நான் ஈடுபாடுகாட்டுவதற்கு முதற் காரணம் வாசிப்பதில் எனக்கு தீவிர விருப்பம், ஊர் பற்று இனப்பற்று சமயப்பற்று கலை கலாசாரத்தை வளர்க்க வேண்டும் என்ற விருப்பம் முதலில் கட்டுரைகளை எழுத தூண்டியது. பின்னர் சிறுகதை அதற்கு பின் வரலாற்று நூல்களை வாசித்ததன் மூலம் ஏற்பட்ட விருப்பம் இலக்கிய அனுபவம் என்பவை 2013 ஆண்டு நாகர் எழு வன்னி என்ற நூலையும் 2019ம் ஆண்டு பேரும் ஊரும் என்ற நூலையும் எழுத தூண்டியது.

**கேள்வி- நீங்கள் நாகர் எழு வன்னி என்ற நூலை எழுதியதன் நோக்கம் என்ன?**

**பதில் -** சரியான வரலாற்றை எமது மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கு எனக்கு நீண்டகாலம் இருந்தது நாகர்களின் வருகையும் அதன் பின்பு சோழர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக அதாவது சோழர்களின் போர்வீரர்களாக வன்னியர்கள் இருந்தனர் வேளைக்காரர்களாக இருந்தனர் சோழ மன்னன் கூப்பிடும் வேளைகளில் வன்னியர் விசுவாசத்துடன் வருவார்கள் இதனாலே அவர்கள் வேலைக்காரர் என்று அழைக்கப்பட்டனர். போரில் சோழ ராசா வென்றால் வன்னியர் பரிசு பெறுவர் தோற்றால் வாளை மேல் எறிந்து சுழன்று வரும் கூர் வாள் கழுத்தில் பட்டு தற்கொலை செய்ய வேண்டும் எனவே தான் வன்னியர்கள் பலம் பொருந்தியவர்களாகவெற்றி பெற வேண்டும் என்ற அபிலாசையுடன் வளர்த்தெடுக்கப்பட்டார்கள் இவ்வாறான வீரவரலாற்றை சரியாக எமது மக்களுக்கு படைப்பின் ஊடாக சொல்ல ஆசைப்பட்டேன் இலக்கு இருந்தது எழுதினேன் அது தான் ''நாகர் எழு'' வன்னி என்ற நூல் என்னால் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி- வன்னியை ஆண்ட மன்னர்களில் பிரசித்தி பெற்றவர்கள் என்று நீங்கள் கருதுவது?**

**பதில்** - பண்டார வன்னியன் மற்று கயிலை வன்னியன் போன்றவர்களை குறிப்பிடலாம் இவர்களில் பண்டார வன்னியனை நாம் புகழ்ந்து பேசும் அளவிற்கு கயிலை வன்னியனை புகழவில்லை. அவருக்கு நாம் சிலையும் வைக்கவில்லை கயிலை வன்னியன் சிறந்தவர்

**கேள்வி - வவுனியன் என்ற பட்டம் பற்றிய உங்கள் கருத்து?**

**பதில்** - திறமைசாலி சாதனையாளனுக்கு வன்னி மன்னர்களால் வழங்கப்பட்ட பட்டம் இவர்களுக்கு குளத்தை, கோயிலை பராமரிக்கும் பொறுப்பு வழங்கப்படும்.

**கேள்வி - பேரும் ஊரும் என்ற நூல் எழுதக்காரணம் என்ன?**

**பதில்** - பொருத்தம் இல்லாமல் ஊருக்கு பெயர் வைக்க கூடாது. ஊருக்கு பெயர் வைத்தால் அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும்.

உதாரணமாக குளுமாட்டு சந்தி என்ற பெயர் நெளுக்குளத்தில் எவ்வாறு வந்தது என்றால் குளுமாடு ஒருவருக்கு குத்தியது அவர் இறந்து போனார். அந்த இடம் தான் குளுமாட்டு சந்தி என்று அழைக்கப்பட்டது அவ்வேளை அங்கு எந்த குடிமனைகளும் அங்கு இல்லை. அந்த இடம் உண்மையில் மருக்காரம்பளை என்றே அழைக்கப்பட்டது அதற்கு காரணம் உண்டு மருக்காளை என்ற மரத்தின் கீழ் மாடுகள் தங்க வைக்கப்பட்டது. மாடுகள் தங்க வைக்கப்படும் இடம் பளை என்று அழைக்கும் வழமை அக்காலத்தில் இருந்தது. இதனால் மருக்காளை பளை என்ற பெயர் காரணத்தோடு தோற்றம் பெற்றது.

விடத்தல்பளை புலோப்பளை என்ற பல பளைப்பெயர்கள் உருவானது பளை என்பது தங்க வைக்கப்பட்ட இடம் என்று பொருள்படும். மானிடர்கள் புரத்தை அண்மித்து இருந்தனர். கோபுரத்திற்கு அருகில் புரத்தை குறிக்கும் ஊரின் பெயர்கள் உருவானது காஞ்சிபுரம், கற்பகபுரம், சிதம்பரபுரம், எனப் பல புரங்களை குறிக்கும் ஊர்கள் உருவானது. இவ்வாறு ஊரின் பெயர் உருவான உண்மைக்காரணத்தை தெளிவு படுத்தவே பேரும் ஊரும் என்ற நூல் எழுதக்காரணமானது.

**கேள்வி - பேரும் ஊரும் என்ற நூலில் அட்டை படம் கல்நாட்டினகுளம் பூங்காவின் மலைப்படம் பிரசுரிக்க காரணம்?**

**பதில்** - கல்நாட்டினகுளம் என்ற பெயருக்கான காரண காரிய பொருத்தபாட்டை சித்தரிக்க தமிழ் பிரதேசசபை பூங்கா படம் உதவியது.

**கேள்வி - மொழி வாழ்வில் எவ்வளவு முக்கியத்துவத்தை வழங்குகிறது?**

**பதில்** - அது ஒரு அடையாளம் கலாசாரம் மனிதனை மனிதன் புரிய உதவுவது குறிப்பாக சிறிய வயதில் குழந்தைக்கு நாம் என்ன மொழியை சொல்லி கொடுக்கிறமோ அதைதான் அந்த குழந்தை பேசும் அந்த குழந்தை தான் வாழும் சூழலில் இருந்துதான் மொழியை கற்கிறது. நாம் பிள்ளைக்கு சோறு ஊட்டி விடுவதற்காக காட்டுனை போட்டுவிட்டால் பிள்ளை காட்டுனில் உள்ள மொழியை சில வேளை கற்க ஆரம்பித்துவிடும் இது தான் கண்ட உண்மை அங்கு பேசப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொனியிலே பேச ஆரம்பிக்கும். இதில் நாம் கவனிக்க வேண்டியது நாம் எந்த மொழியை ஆரம்பத்திலிருந்து கடைப்பிடிக்கிறமோ அதுவே கலாசாரமாக மாறும் என்பது யதார்த்தம்.

**கேள்வி - வாசிப்பு பழக்கம் ஏன் அவசியம் என்று கருதுகிறீர்கள்?**

பதில் - வாசிப்பு இல்லை என்றால் உலகத்தை அறியமுடியாது. கண்டுபிடிப்பு, வரலாறு, புதிய விடயங்கள், விளங்கா விடயங்களை தெரிய வரலாற்றை இலகு தமிழில் அறிய வாசிப்பு அவசியம் .

**கேள்வி - தற்போது வளர்ந்து வரும் சமூகத்திற்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில் - மண்ணை இழந்தால் நாம் மீள பெறமுடியும். ஆனால் இழந்த கலாசாரத்தை நாம் மீள பெறமுடியாது. அவற்றை இழக்காமல் பேணி பாதுகாக்க வேண்டும் கலாசாரம் தொடர்ந்து சீராக இருக்க வேண்டும் கலாசாரம் எமது அடையாளம் என்பதை மறந்துவிடக்கூடாது .

**நேர்கண்டவர்:**
**எழுத்தாளர் சு.வரதகுமார்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பைப்போல் சுவைப்போம்

பெரும்பாலும் வாசிப்பு திறன் கொண்டோர் நிறைந்த தற்காலச்சூழலில் வாசிப்பு எனும் தேடலானது ஒவ்வொரு மனிதனும் கடந்து செல்ல வேண்டிய கட்டாயமாகிறது. அதாவது இன்றைய சூழலில் மனிதனின் பிரதான சாதனமான மொபைல் போன் முதல் கொண்டு இலத்திரனியல் சாதனங்களின் பாவனையில் கூட வாசிப்பு திறன் என்பது இலை மறை காயாய் ஒழிந்திருப்பதனை அவதானிக்கலாம். இவ்வாறான வாசிப்பினை எவ்வாறாக மேற்கொள்வதென ஆராய்வோமெனில் ஒரு கரும்பை எடுத்தோமானால் அது நுனி முதல் அடி வரை சுவைத்துபார்த்தால் முதலில் சுவையாக இருக்காது பின்பு அடியை நோக்கி செல்லச்செல்ல அதன் சுவை அதிகரித்துச் செல்லும். அதே போல நாம் ஒன்றை வாசிக்க தொடங்கும் போது சுவையாகவும் சுவாரசியமாகவும் காணப்படும். உதாரணமாக கதைப்புத்தகத்தை வாசிக்கும் போது வைக்க மனம் வருவதில்லை வாசித்து முடிக்கும் வரை.

"கண்டதும் கற்க பண்டிதன் ஆவான்"

என்ற கூற்றுக்கு இணங்க வாசிப்பதற்கு ஏற்ற வகையில் விரும்பிய ஒழுங்கில் வாசித்து பயனடையலாம். விளையாட்டு பொருட்களாக வாசிப்பு சாதனங்களை வாங்கிக் கொடுக்கும் பெற்றோரின் பிள்ளைகள் விரைவாக வாசிக்கப்பழகுகின்றனர்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

இளமையிலேயே பல்வேறு நடத்தைக் கூறுகளும் ஆளுமையும் உருவாகுவதை ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர். இளம் பருவத்திலேயே முக்கிய கற்றல் நிகழ்வுகளும் ஆற்றல்களும் நிகழ்கின்றன. நடத்தைக்கோலங்கள் படிபடியாக இடம்பெறுகின்றன சமூக விழுமியங்கள், பிள்ளைகளைத் தழுவிக் கொள்கின்றன. இக்காலகட்டத்தில் வாசிப்பு பழக்கத்தையும் பிள்ளைகளுக்கு ஓர் அங்கமாக புகட்டினோமானால் அது அப்படியே அவர்களிடம் நிலைத்து விடுகின்றது.

"தொட்டிற் பழக்கஞ் சுடுகாடு மட்டும்"

என்பது போல சிறு வயது தொடக்கம் வாழ்க்கை முழுவதும் இப்பழக்கம் தொடர்வதை நாம் தற்போது காணக்கூடியதாக உள்ளது. எமது பெரியார்கள் இன்றும் கூட நாள் இதழ்களை வாசிப்பது வழக்கம் அவர்களுக்கு காலையில் நாளேட்டினைப் புரட்டவில்லை என்றால் உணவு உண்ணாததற்கு சமனாக எண்ணுகிறார்கள். அதற்காக சிலர் எத்தனையோ கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று நூலகங்களில் உள்ள பத்திரிக்கைகளை வாசிப்பதைக்கூட அவதானிக்க முடிகிறது.

மேலும் சுமார் இருபது தொடக்கம் நாற்பத்தைந்து வயதிற்கு இடைப்பட்டவர்களின் வாசிப்பு பழக்கம் பூச்சியமாகவே காணப்படுகிறது என்பது மனவருத்தத்திற்குரிய விடயமாக உள்ளது. வாசிப்பதால் அவர்கள் தம் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும். அத்தோடு சிந்தனையைத் தூண்டி அனுபவத்தைப்பெற வைப்பதற்கும் வாழும் சூழலை புரிந்து கொள்ளவும் ஆன்மீக வழிகளைப் பின்பற்றவும், கலைகலாசாரத்தில் சிறந்து விளங்கவும் மேலும் பெரியவர்களை மதிக்கவும், நம் கலாச்சார விழுமியங்களைப் பேணவும், சிக்கல்களுக்கு முகம் கொடுக்கவும் மற்றும் தானாகவே ஆக்க பூர்வமான முடிவு எடுக்கும் திறமையையும் இவ் வாசிப்பானது வளர்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமன்றி கல்வித்தத்துவங்களை முன் வைத்த கல்வியாளர்களில் ஒருவரான "மரியா மொன்டசோரி அம்மையார்" வாசிப்பு பற்றி கூறிய கருத்துக்கள் சில வருமாறு.

"வாசித்தலானது கருத்துக்களை அடையாளம் காண்பதன் மூலம் நடைபெறுகிறது. கணிதம் வரையப்பட எண்களை வாசித்தல் மூலம் நடைபெறுகின்றது"

"சாதாரண பிள்ளை நான்கு வயதில் எழுத ஆரம்பித்து ஐந்து வயதில் வாசிக்கின்றது"
இவ்வாறு பல கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். இதனை பின்பற்றி இனிவரும் சந்ததியினராவது வாசிப்பில் மேலோங்கி பண்டிதர்களாக வாழ வேண்டும். இதற்கு நாம் வழிகாட்டுவோம்.

**பா.யோகாநந்தி,**
**அம்பாள் முன்பள்ளி ஆசிரியை,**
**கூமாங்குளம்,**
**வவுனியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்

உளி எடுத்த கல் சிதைத்து
சிலை வடித்தான் சிற்பி
தடி எடுத்து எமை அடித்து
தரணி போற்ற வைத்தாய்
அகக்கண் இரண்டிருக்க
அறிவுக்கண் திறந்து வைத்த
ஆசிரியப் பெருந்தகைகளுக்கு
சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

**ஆக்கியோன்**
**திரு.முத்தழகு நாகையா**
**தேசாபிமானி ஆன்மீக தீபம்,**
**கூமாங்குளம்,**
**வவுனியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இயற்கை எழில் நிறைந்த எங்கட கல்நாட்டினகுளம் பூங்கா

வயலோடும் மலையோடும் ஆற்றங்கரை அலையோடும் எழில் கொஞ்சும் கல்நாட்டினகுளம் பூங்கா வடமாகாணத்திலேயே இயற்கை எழில் தரும் மனதிற்கு இதமான பூங்காவாகும். வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட இப்பூங்கா வவுனியா தெற்கு பிரதேசசபையினால் ஸ்தாபிக்கப்பட்டு சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா நகரத்திலிருந்து வாகனமொன்றில் 10 நிடங்களுக்குள் சென்று பார்வையிடக்கூடிய தூரத்தில் அமைந்திருந்திருப்பது சிறப்பான அம்சமாகும். அமைதியான விவசாயம் நிறைந்த கிராமியச் சூழல் மனதிற்கு மிகுந்த சந்தோசத்தை தரவல்லது.

எடுப்பான கல் மலையை தன்னகத்தே இப் பூங்கா கொண்டிருப்பது ஒரு வரப்பிரசாதமே பூங்காவிற்கு முன் அழகான ஒரு சிலை தண்ணீர் ஊற்று அச்சிலை ஊடாக வருவது போன்ற தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தண்ணீர் தேங்கி நின்றால் அது ஒரு சிறிய குளம் தான் என்று சொல்லுமளவிற்கு கட்டிடவியல் அழகு மனதோடு பேசும்.

நுழைவாயில் மிக எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது. சங்ககாலம் சங்கமருவிய காலம் இரண்டையும் நினைவூட்டத்தக்க அம்சங்கள் இங்குள்ளது நான்கு வகையான நிலங்களை இப்பூங்கா நினைவூட்டும்

எமக்கு பிரச்சினைகள் வந்துவிட்டால் முதலில் தலையிடி வந்து விடும் பின்னர் மனவெறுப்பு, அசண்டை, வாழ்வில் விரத்தி, இப்படியெல்லாம் அடிக்கிக்கொண்டு போகலாம். பொதுவாக இன்றைய நவீன கால கட்டத்தில் இலத்திரனியல் ஊடகங்களை நோக்கி எமது கவனம் திரும்பும் அல்லது தலையிடிக்கு மருந் எடுக்க வைத்தியசாலையை நோக்கி செல்வோம் அங்கு வைத்தியர் கொடுக்கின்ற மாத்திரைகள் உடனடியாக தலையிடியை தீர்க்கும். ஆனால் மீண்டும் பிரச்சினைகள் தலைதூக்கும் போது தொடர்ச்சியாக வைத்தியசாலை செல்வதும் அங்கு மருந்து எடுத்துக்கொண்டு அதனை பயன்படுத்தும் போது பக்க விளைவுகளை ஏற்படுவது என்பது நாம் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். இப்பிரச்சினையில் இருந்து விடுபட நாம் இரண்டாம் கட்டமாக ஆன்மீகத்தை நாடுகின்றோம் ஆலயத்திற்கு செல்கின்றோம். ஆலயத்தில் இருக்கின்ற இயற்கை சூழல் முதலில் எம்மை ஆறுதல் படுத்திவிடும். இது போன்றே கடற்கரை, ஆற்றங்கரை, மரநிழல் அதிகளவு மரத்தை கொண்ட பூங்கா என்பவற்றை நாடுகின்றோம். சில பூங்காக்களல் செயற்கையாக மரங்கள் நாட்டப்பட்டு இருக்கும். ஆனால் கல்நாட்டினகுளம் பூங்கா இயற்கையாக மர நிழல் தரும் மரங்களை அதிகளவு கொண்டுள்ளது.

கோடைகாலங்களில் இவ்மரங்களிற்கு கீழ் இருக்கும் போது நாம் எமது பேச்சு வழக்கு மொழியில் சொல்வோமாக இருந்தால் அந்தமாதிரியிருக்கும் இன்னொரு வகையில் சொன்னால் சூப்பராக இருக்கும் என்ற சொல்லை பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துவார்கள். இதனை வெறும் சொற்களில் சொல்லி அடங்காது போய் அங்கிருந்து அதனை அனுபவித்தால் தான் புரியும்

இந்த மரங்களில் ஏராளமான குரங்குகள் கூட்டமாக ஏறி நிற்கும். அவைகளின் கூட்டுகுடும்ப வாழக்கையை அங்கு ரசித்து பார்க்கலாம். குரங்கில் இருந்து பிறந்தவன் தான் மனிதன் என்று சொல்லுமளவிற்கு மனிதரை போன்ற நடை செயற்பாடுகளை காணலாம்.

பூங்காவிற்கு பின்புறமாக குளம் ஒன்றுள்ளது. அங்கு பலர் மீன் பிடிக்க வருவார்கள். தொழிலுக்காக மீன் பிடிப்பவர்கள் மற்றும் பொழுது போக்குக்காக மீன் பிடிப்பவர்கள் குளக்கரையில் அழகை ரசிக்க வருபவர்களும் உள்ளனர். இக்குளம் ஆழமாக்கப்பட்டு படகு சேவை ஒன்று ஆரம்பிக்கப்படுமாயின் மேலும் சிறப்பாக இருக்கும் இவ் நீர் நிலை பூங்காவின் பின்னழகை ரசித்து பார்க்க வைக்கிறது.

முன்னழகாக வயலும் வயல்சார்ந்த இடமும் காணப்படுகிறது. ஒரு பெண்ணுக்கு இடுப்பழகு எவ்வாறு முக்கியமோ அதே போல் இப்பூங்காவிற்கு உயர்ந்த மலை முக்கிய தோற்றத்தை வழங்குகிறது. மலை உச்சியை அடைவதற்கு படிக்கட்டுகள் காணப்படுகிறது. மலை உச்சியில் இருந்து ஊரைப்பார்த்தால் ஊரின் அழகு தெட்டத் தெளிவாக புரியும். மலைகளுக்கிடையில் குகையின் தோற்றம் மலை அடிவாரம் என்பன இருந்து மனம்விட்டு கதைப்பதற்கு இதமாக இருக்கும். அந்த இடத்தில் ஒன்றாக சேர்ந்து கச்சான், மிக்சர், பாரம்பரிய உண்ணும் போது சாதாரான சுவையைவிட மேலும் சுவையாக இருக்கும். சிறார்கள் ஒழித்து பிடித்து விளையாடினால் என்ன என்று நினைப்பதற்கு ஏற்ப ஏராளமான மறைவிடங்கள் உள்ளது. சிலருக்கு இவ்வாறான மறைவிடங்களில் மற்றவர் தொந்தரவு இன்றி கருத்து பரிமாறி அன்பைப்பகிர்ந்து கொண்டு இனிய பொழுதைக்கழிக்க உகந்த இடமாக இவ்விடம் அமைந்துள்ளது.

சிலர் காலையில் வந்தால் மாலை சூரியன் மறையும் வரை தமது அன்பிற்கினிய பொழுதை கழித்துவிட்டு செல்வார்கள் பாடசாலை மாணவர்கள் சுற்றுலா செல்வதற்கு பொருத்தமான இடமாக இது உள்ளது. ஆரம்பகாலத்தில் எதிரிகளிமிடந்து மன்னர்கள் தம்மை பாதுகாக்க வசதியான இடமாக இவ் மலைத்திடல் அமைந்திருக்கலாம் என்பது இவ்வூர் மக்களின் கருத்தாகவுள்ளது.

சிறார்கள் விளையாடுவதற்கு வசதியாக ஊஞ்சல் உள்ளது சகலரும் இருப்பதற்கு வசதியான சீமெந்திலான வட்ட மேசைகள் சாய்வான கதிரைகள் உள்ளது. இயற்கையாக பல விதமான பறவைகள் இங்கு தங்கிச்செல்லும் அப்பறவைகளின் குரல் மனதிற்கு மகிழ்வை தரும்.

பலர் இங்கு படப்பிடிப்பை மேற்கொள்ள வருவார்கள். நாங்களும் மலைகள் மரங்களுக்கிடையில் புகைப்படம் எடுத்து இலத்திரனியல் ஊடகங்களில் பிரசுரம் செய்யும் போது பலர் நீங்கள் கண்டியிலா இப்படத்தை எடுத்தீர்கள்? கண்டியில் உள்ள பூங்காவா? என்று கேட்பார்கள் அந்தளவிற்கு குளிர்ச்சியான பசும் சோலையுள்ள இடம்தான் கல்நாட்டின குளம் பூங்கா. பலருக்கு இந்த பூங்காவின் சிறப்பு புரிவதில்லை குடும்பத்தோடு போய் பாருங்கள் மறு தடவையும் போகத்தூண்டும் வடக்கு மாகாணத்தில் உல்லாசபயணிகளுக்கு ஏற்ற இடமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலா தளமாக இவ்விடம் அமைந்துள்ளது சிதம்பரபுரம் பழனி முருகன் ஆலயத்திற்கு வரும் சுற்றுலாத்துறையினர் இங்கு வருவதுண்டு. மேலும் இப்பூங்காவில் உணவகங்கள், மீன்கள் வளர்ப்பு, மிருகங்கள், பறவைகள், சிறுவர் விளையாட்டு பொருட்கள், இருக்கும்பட்சத்தில் இலங்கையில் தலை சிறந்த பூங்காக்களில் இது ஒன்றாகும் என்பது எனது நம்பிக்கையாகும். உல்லாச பயணிகள் இப் பூங்காவிற்கு அதிகளவு வருகை தருவார்களாயின் இலங்கையின் அந்நியசெலாவணி அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை இப்பூங்காவின் சிறப்புக்களை நாம் மற்றவர்களுக்கு எடுத்தியம்புவது மூலம் இக்கால சந்ததியினரும் எதிர்கால சந்ததியினரும் பயன்பெறுவர் என்பதில் ஐயமில்லை. இந்த பூங்காவை புனரமைக்க உதவிய வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் கௌரவ பிரதேசசபை தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள் அரும்பாடுபட்ட ஊழியர்கள் யாவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். இப்பிறவியில் இப்பூங்காவை பார்க்க தவறினால் நாம் செய்த பெரிய தவறாகிவிடும். எங்கள் மனக்கவலைகளை போக்கி இன்புற்று வாழ இவ்விடத்தை பார்ப்போம், மகிழ்வடைவோம்.

**திரு.சு.வரதகுமார்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இடம்பெற்ற போட்டிகளின் முடிவுகள்

| தொ. இல | போட்டி விபரம் | மாணவர் பெயர் | பாடசாலை விபரம் | பெற்ற இடம் |
|---|---|---|---|---|
| 01 | **முன்பள்ளி நிறந்தீட்டல்** | தெ.மிதுர்சிகா | அம்பாள் முன்பள்ளி, கூமாங்குளம் | 1 |
| | | க.கிதுசனா | இளங்கதிர் முன்பள்ளி, கல்நாட்டின குளம். | 2 |
| | | சுரேஸ் ஏஞ்சலீனா | சரஸ்வதி முன்பள்ளி, இலுப்பைக்குளம் | 3 |
| | | ச.அபினாஷ் | கணேசா முன்பள்ளி, எல்லப்பர் மருதங்குளம் | 3 |
| 02 | **தரம் 1 உறுப்பெழுத்து** | க.கெனிஸ்டன் | வ.அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம், பூந்தோட்டம் | 1 |
| | | எழில்ரூபன் புவீயா | நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் | 2 |
| | | உ.பேன்சிகா | பாரதி வித்தியாலயம், பாரதிபுரம் | 3 |
| 03 | **தரம் 2 சித்திரப்போட்டி** | செ.பியோஜவன் | கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க. பாடசாலை | 1 |
| | | வி.பிரதாஜினி | பெரிய கோமரசங்குளம் ம.வி | 2 |
| | | ர.டினுஜன் | சுந்தரபுரம் அ.த.க பாடசாலை | 3 |
| | | ஜேசுதாசன் இனோசி | வ.நெளுக்குளம் கலைமகள் ம.வி | 3 |
| 04 | **தரம் 3 கவிதை** | ப.யன்சிகா | இயங்கராவூர் அ.த.க. பாடசாலை, பூவரசங்குளம் | 1 |
| | | ப.டினுஸ்கா | ,, | 2 |
| | | த.ஜஸ்வீன் | முருகனூர் சாரதா வித்தியாலயம் | 3 |
| | | தே.ஹேஸ்மிதா | மகாறம்பைக்குளம் அ.த.க.பாடசாலை | 3 |
| 05 | **தரம் 4 – 5 கட்டுரை** | சந்திரகாசன் சரணியா | கிடாச்சூரி கருவேப்பங்குளம் க.உ.வி | 1 |
| | | மு.தக்சனா | வ.முருகனூர் சாரதா வித்தியாலயம் | 2 |
| | | ச.சானுஜா | சிவபுரம் ஆரம்பப்பாடசாலை, சிவபுரம், வவுனியா | 3 |
| 06 | **தரம் 6 – 8 கட்டுரை** | கஸ்வீயா தயானந்தன் | பூவரசங்குளம் மகா வித்தியாலயம் | 1 |
| | | சிவகுமார் பிரியந்தன் | சித்திவிநாயகர் வித்தியாலயம், மறவன்குளம், வவுனியா | 2 |
| | | ஜீ.யதுசிகா | பாரதிதாசன் வித்தியாலயம், மறவன்குளம், வவுனியா | 3 |
| 07 | **தரம் 9 – 11** | யோ.கஜனி | நெளுக்குளம் கலைமகள் ம.வி | 1 |
| | | ச.யதுர்சிகா | வ.பாரதிதாசன் வித்தியாலயம், மறவன்குளம் | 2 |
| | | சிவகுமார் டிலக்ஷனா | வ.கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம் | 3 |
| 08 | **தரம் 12 – 13** | சந்திரகுமார் பிருந்தா | வ.பெரியகோமரசங்குளம் ம.வி | 1 |
| | | பரஞ்சோதி தர்ஷிகா | வ.பூவரசங்குளம் ம.வி | 2 |
| | | சு.யதுஷா | வ.கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம் | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை

கடவுள் தந்த உயிர் என்று சொல்லவா!
இல்லை கடவுளிலும் உயர் என்று செல்லவா!

நிகரில்லா என் சுவாசம் நீயே
என் மனம் தினம் ஏங்கும் அன்பும் நீயே!

உருவம் அறியா கருவிலும் எனை காதல் செய்தவளே!
பசி மறந்து பாலூட்டி சீராட்டி எனை காத்தவளே!

உனைப்பற்றி எழுதாமல் - நான்
எழுதும் எழுத்துக்கள் தான் கவிதையாகுமா?

காலையில் கதிரவன் கதிர் உச்சமடைந்தும்
சூடு நான் காணவில்லையே!

உன் சேலை முந்தானையின்
நிழலைத்தான் கண்டேன் அம்மா.

ஆழ்கடலின் ஆழம் பெரிதா?
நீண்டிருக்கும் இமயம் பெரிதா?

எத்தனை உறவுகள் வந்தாலும்
நீ காட்டும் பேரன்பே பெரிது

தாயன்பிற்கு ஈடாகும் அன்பு
இவ்வுலகில் தான் உண்டோ?

முதலில் நான் பேசியதும் உன் பெயர் தான்!
முதலில் நான் எழுதியதும் உன் பெயர் தான் அம்மா!

**ப.யன்சிகா**
**தரம் 3**
**இயங்கராவூர் அ.த.க. பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாகுமா..?

காலை எட்டு மணியளவில் அலுவலகத்திற்கு வந்த நரேன், அலுவலகப் பணியாளர்கள் வணக்கம் கூறியபோது, பதில் வணக்கம் கூறிக்கொண்டு தனது அறைக்குள் நுழைந்தார். கையிலிருந்த பையினை மேசையில் வைத்துவிட்டு அலுமாரியிலிருந்து, அன்றைய தினம் நடக்கவிருக்கும் செயற்திட்ட மீளாய்வுக் கூட்டத்திற்கு தேவையான சில ஆவணங்களை எடுத்துக் கொண்டிருந்தார். ஏனென்றால் அந்த நிறுவனத்தின் செயற்திட்ட முகாமையாளராக நரேன் கடமை புரிகின்றார்.

நரேனின் அறைக்குள் நுழைந்த அலுவலக உதவியாளரான ராமு,

"எக்ஸ்கியூஸ்மி சேர்..."

"வா ராமு. என்ன விசயம்"

"தண்ணி கொண்டுவந்தனான்"

"ஓ அப்பிடியா" ரேபில்ல வச்சிட்டுப் போ" என்று திரும்பிய படியே ராமுவுக்கு பதில் கூறினான் நரேன். நீர் நிரப்பப்பட்ட குவளையை நரேனின் மேசையில் வைத்து மூடிவிட்டுச் சென்றான் ராமு.

கோப்புக்களை எடுத்துக்கொண்டு திரும்பிய நரேன், மேசையில் வைத்த தனது கைத்தொலைபேசியை தேடினான். அதனைக் காணவில்லை என்றதும் நரேனின் பார்வை, சற்றுமுன் தனது அறைக்கு வந்து சென்ற ராமுவின் பக்கம் குவிந்தது. காரணம் நரேன் அலுவலகத்திற்கு வந்ததும் கைபேசியை மேசையில் எடுத்து வைத்துவிட்டுத்தான் பிற வேலைகளைச் செய்வது வழக்கம்.

அழைப்பு மணியை ஒலிக்கச் செய்து ராமுவை உள்ளே அழைத்த நரேன், அவனைப் பார்த்து

"ராமு உண்மையைச் சொன்னால் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். தயங்காமல் சொல்"

"என்ன சேர் கேட்கிறீங்க?"

"ரூமுக்கு வந்ததும் மேசையில் என்ர போனை வைச்சனான். நான் வந்த பிறகு நீ மட்டுந்தான் என்ர கபினுக்கு வந்தனீ. இப்ப என்ர போனைக் காணேல்ல. எடுத்து எங்க ஒழிச்சு வைச்சிருக்கிறாய்"

"என்ன சேர்....உங்கட போனைக் காணேல்லையோ? ஐயோ கடவுளே..! நான் எடுக்கேல... சத்தியமா நான் எடுக்கேல சேர்" என்னை நம்புங்கோ சேர்.....

"பொய் சொல்லாத ராமு! கஸ்டப்பட்ட வீட்டுப் பெடியன், உன்ர உழைப்பை நம்பித்தான் உன்ர குடும்பம் இருக்குது என்ற ஒரே காரணத்துக்காகத் தான் என்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்ட இன்புளுவன்சைப் பயன்படுத்தி, நான் உனக்கு இந்த வேலையை வாங்கித் தந்தனான். அதுக்கு நீ காட்டுற நன்றிக்கடனா இது?''

''ஐயோ கடவுளே... சேர்! நீங்க செய்த உதவிக்கு, என்டைக்கும் உங்களுக்குச் செருப்பா இருந்து வேலை செய்யோணும் எண்டுதான் தினந் தினம் நினைக்கிறனான்.. அப்பிடிப்பட்ட நான் உங்களுக்குத் துரோகம் செய்வேனோ? என்ன நம்புங்கோ சேர்...''

ராமு கதறிக் கதறி அழுது கொண்டிருக்கும் சத்தங்கேட்டு, அலுவலகத்தில் பணிபுரியும் ஏனைய ஊழியர்களும் நரேனின் அறைக்குமுன் கூடிவிட்டனர். அப்போது அங்கு வந்த பொது முகாமையாளர் ''என்ன விசயம் எல்லோரும் இதில கூடியிருக்குறீங்க?'' எனக் கேட்க, நரேன் நடந்ததைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

அங்கு கூடிநின்ற அனைவரும் ராமுவின் பரிதாப நிலையைப் பார்த்து வருத்தப்பட்டார்களே தவிர, அவன்மீது துளிகூடச் சந்தேகம் கொள்ளவில்லை. ஆனால் ஒருவரைத் தவிர. அது ராமுவைப் போல அங்கு அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் கோபி.

நரேனின் விசாரணை தொடர்ந்த வண்ணமிருக்க, குறுக்கிட்ட கோபி, நரேனைப் பார்த்து ''சேர் நான் இவனைப் பற்றிக் கொஞ்சம் சொல்லவேணும்.''

''என்ன''

''ஒரு கிழமைக்கு முன்னுக்கு ராமு என்னோட கதைக்கேக்க, இந்தமுறை சம்பளம் வர ஒரு கமரா போன் வாங்கோணும், அதுக்கு எவ்வளவு காசு முடியும் எண்டு கேட்டவன். ஒருவேளை இவன் தான் உங்கட போனை எடுத்திருக்கோணும் சேர்'' என்றான்.

இதைக் கேட்ட நரேனுக்கு, ராமு மேலிருந்த சந்தேகம் உள்ளங்கை நெல்லிக்கனி போலானது.

''ராமு உனக்கு கமரா போன் வாங்க, நான் வேணுமென்டா பணம் தாறன். ஆனால் என்ர போனைத் தந்திடு. ஏனென்டா அது புறெஜக்டர் போன். அதிலதான் ஓபிஸ் சம்பந்தப்பட்ட முக்கியமான டோக்கியூமென்ட் எல்லாம் ஏத்தி வைச்சிருக்கிறன். தயவுசெய்து அதைத் தந்திடு. நான் உன்ன மன்னிச்சு விடுறன்...''

''நீங்கள் எத்தின தரம் கேட்டாலும் நான் சொல்லப் போற பதில் ஒன்டு தான் சேர். நான் அதை எடுக்கேல. நான் என்ர குடும்பத்து மேல சத்தியம் பண்ணிச் சொல்லுறன். நான் எடுக்கேல சேர். நாங்கள் ஏழையா இருந்தாலும், இதுவரைக்கும மற்றாக்களின்ட சொத்துக்கு *ஆசைப்பட்டதில்ல* சேர்.. அப்பிடித்தான் எங்கட அம்மா என்ன வளத்திருக்கிறா''உண்மையாவே நான் எடுக்கல சேர்.''

மறுபடி மறுபடி ராமு ஒரே பதிலை சொன்னபோதுகூட, நரேனுக்கு அவன் மேல் நம்பிக்கையே வரவில்லை. அவன்தான் போனை எடுத்துவிட்டு மறைக்கிறான் என்ற எண்ணம் நரேனின் உள்ளத்தில் உடும்பாய் ஒட்டிக் கொண்டிருந்தது. ஏனென்றால் ஏழையான ராமு தன்னால் வாங்க வசதியில்லாததால் கைபேசியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவெடுத்திருப்பான் என்று நரேன் அசைக்கமுடியதா நம்பிக்கை கொண்டிருந்தான். இதனால் ராமுவை அலுவலகத்திலிருந்து பணிநீக்கம் செய்யத் தீர்மானித்தான்.

"இங்க பார் ராமு! அலுவலகத்தில கடமை, கண்ணியம், கட்டுப்பாடு முக்கியம். உன்ன பொலிஸில் பிடிச்சுக் குடுப்பம் எண்டுதான் நினைச்சனான். ஆனா… அதால அலுவலகத்துக்குத் தான் கெட்ட பேர் வரும். சோ… கள்ளனுக்கு இந்த ஒபிஸில இடமில்லை நீ வெளிய போகலாம்" என்றான்.

இதைக் கேட்ட ராமு, நரேனின் கால்களைப் பிடித்து கதறி அழுத போதிலும் நரேன் தனது முடிவிலிருந்த சற்றும் கீழிறங்கவில்லை. இன்ரகொம் மூலம் காவலாளியை அழைத்து ராமுவை வெளியேற்றினான்.

ராமு வெளியே செல்லும் போது அவனின் காதில் படுமாறே, "இப்பிடியான ஆக்களை பாவம்பாத்து ஒருநாளும் வேலைக்குச் சேர்க்கக் கூடாது. தாங்கள் ஆசைப்படுற பொருள் வாங்க அதுகளிட்ட காசில்லாட்டி இப்பிடித்தான் களவெடுக்குங்கள். இந்த மாதிரி எத்தினயக் களவெடுத்தானோ தெரியேல்ல" என அலுவலக ஊழியர்கள் சிலர் கதைத்துக் கொண்டனர். அந்தப் பேச்சுக்கள் ராமுவின் வெந்துகிடக்கும் உள்ளத்தில் வேலினைப் பாய்ச்சுவது போல இருந்தன.

இந்தப் பிரச்சினை ஓய்ந்ததும், நாட்காலியில் இருந்து சுழன்றவாறு, ராமுவின் செயல்களை நினைத்து கொண்டிருந்த நரேன், மேசையிலிருந்த அலுவலகத் தொலைபேசி ஒலி எழுப்பினதும் திடுக்கிட்டு விழித்து ரிசீவரை எடுத்து காதில் வைத்து, "ஹலோ! யார் கதைக்கிறது..?"என்றான்.

மறுமுனையில் இருந்து பேசியவர், "சேர் நீங்கள் ஒரு போனை பஸ்ஸில மிஸ் பண்ணீட்டீங்களா? நான் அந்த பஸ்ஸின் கொண்டெக்டர் கதைக்கிறன். பஸ்சுக்குள்ள ஒரு போன் கிடந்தது. அதில மை ஒபிஸ் என்ட பேரில ஒரு நம்பர் இருந்தது. அந்த நம்பருக்குத்தான் இப்ப எடுத்தனான். நீங்க யார்? எங்க வேலை செய்யுறீங்க? என்றார்.

அதற்கு நரேன், "ஓம் சேர்! நான் நரேன் ஸ்கைப் சொப்ட்வெயார் கொம்பனியில வேலை செய்யுறன். அது என்ர போன்தான். நீங்கள் பஸ்டான்டில வைச்சிருங்கோ நான் வந்து எடுக்கிறன்." என்று சொல்லிவிட்டு, அலுவலகத்தில் யாரிடமும் ஒன்றும் பேசாமல் அலுவலகப் பணியாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொண்டு பேருந்துத் தரிப்பிடம் நோக்கி வேகமாகப் பறந்தான் நரேன். அங்கு குறித்த பேருந்து நடத்துனரைச் சந்தித்த நரேன்,

*"ஹலோ அண்ணா! நான்* நரேன். அந்த போனை தொலைச்சது நான் தான்.

"பெறுமதியான போனை இப்படி *மிஸ் பண்ணீட்டிங்களே... வேறுயாரிட்டையும்* பேயிருந்தா சிலவேளை தந்திருக்கவே மாட்டினம்."

"உண்மை தான். வழமையா நான் காரிலதான் ஒபிசுக்கு வாறனான். இன்டைக்கெண்டு காரில சின்னப் பிரச்சனை. அதுதான் பஸ்ஸில வந்தனான். சீட்டில இருக்கேக்க பொக்கட்டில இருந்த போன் வழுக்கி கீழ விழுந்திட்டுது போல. நான் கவனிக்கேல்ல…"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தாங்கோ உங்கட போன;... இனியாவது அவதானமா வைச்சிருங்கோ..." என்று போனை நரேனிடம் கொடுத்தார் நடத்துனர். அதற்கு கைமாறாக நரேன் ஒரு தொகைப் பணத்தை நடத்துனரிடம் நீட்ட "மனிசனாப் பிறந்த நாங்க, இப்பிடி சின்னச்சின்ன உதவி செய்யாட்டி என்ன பயன்" என்று கூறி பணத்தை நரேனின் சட்டைப் பையினுள்ளேயே வைத்துவிட்டு நகர்ந்தார் நடத்துனர்.

அங்கிருந்து புறப்பட்ட நரேனுக்கு, போன் கிடைத்த பின்னர் கூட சந்தோசம் கிடைக்கவில்லை. காலையில் நடந்த சம்பவம் அவன் உள்ளத்தைச் நெருடிக்கொண்டேயிருந்தது. தன்னுடைய அவசர புத்தியால் அப்பாவியைத் தண்டித்துவிட்டோமே என நொந்து கொண்டு, கூட்டத்துக்கு நேரமானதால், அலுவலகம் நோக்கிப் புறப்பட்ட நரேனுடைய கைகள், வண்டியின் வேகத்தை அதிகரித்தது.

வழியில் ஒரு பஸ் தரிப்பிடத்தில் ராமுவைப் போல் ஒருவன் அமர்ந்திருப்பதை அவதானித்த நரேன் அருகில் சென்று பார்த்தபோது அது ராமுதான் என உறுதியானதும் வண்டியை நிறுத்தி விட்டு அவனருகே சென்றான்.

"ராமு என்ன மன்னிச்சிடு நான் மிகப் பெரிய தவறு செய்திட்டன்... என்ர அவசர புத்தியால உனக்கு கள்ளப்பட்டம் கட்டி உன்ன அவமானப்படுத்தீட்டன். ஐம் ரியலி சொறி ராமு..."

"சேர்! நான் எடுக்கேல்ல நான் எடுக்கேல்ல எண்டு எத்தின தரம் கெஞ்சினான்? ஏழையா இருந்ததால் உங்கட மனசுக்கும் நான் கள்ளனாத்தானே தெரிஞ்சனான். உங்களைப் போல வசதியான ஆக்கள் எங்க பிழை நடந்தாலும் முதல்ல கஸ்டப்பட்டவே மேலதான் சந்தேகப்படுவினம். ஏதோ ஏழைகள் எல்லாருமே கெட்டவர்கள், கள்ளர் என்றதுதானே உங்கட எண்ணம்?"

"உண்மை தான் ராமு... நீ கஸ்டப்பட்டவன் எண்டதால் நீதான் எடுத்திருக்க வேணும் என்டு சந்தேகிச்ச என்ர மனசு, போன் வேறெந்த வழியில துலைஞ்சிருக்கும் எண்டு யோசிக்க தவறிட்டுது. தயவுசெய்து என்ன மன்னிச்சிருப்பா. நீ திரும்பவும் ஓபிசுக்கு வா. அப்பத்தான் என்ட மன உறுத்தல் இல்லாமல் போகும்..."

"இல்லை சேர் நான் திரும்பவும் அங்க வரமாட்டன். இனியும் அங்க எதையாவது காணாட்டில் முதலில் என்னத்தான் சந்தேகப்படுவினம்."

"இல்ல ராமு நான் இனி உன்ன அப்பிடி நினைக்கமாட்டன்.. தயவுசெய்து நீ வா...."

"நீங்களும், அந்த அலுவலகத்தில வேல செய்யிற சிலரும் கதைச்ச கதையலால இன்னும் என்ர நெஞ்சு வலிச்சுக் கொண்டிருக்குது. நாங்கள் பணத்தால் ஏழையாக இருந்தாலும் பழக்கவழக்கத்தில பணக்காரராத்தான் இருக்கிறம். எடுத்த எடுப்பிலேயே கஸ்டப்பட்ட ஆக்களில பழி போடும் உலகந்தனே இது. இதில நீங்க மட்டும் விதிவிலக்கா? ஆனால் எல்லாச் சந்தர்ப்பத்திலும் ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதமாகாது சேர்" என்று கூறிய ராமுவின் கண்கள் சினத்தால் சிவந்திருந்தது.

ராமு கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நரேனின் இதயத்தில் ஈட்டியால் துளையிட்டது போல வலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் படித்து உயர் பதவியிலிருந்தாலும் மனிதர்களைப் படிக்க மறந்து விட்டேனே என்று உள்ளம் நொந்த நரேன், இனியும் ராமுவைத் தொந்தரவு செய்யவேண்டாம் என எண்ணியவனாய் குற்ற உணர்ச்சியிலிருந்து மீளாமல், ராமுவின் கண்களைப் பார்க்கத் தைரியமில்லாமல், வார்த்தையால் மட்டும் "நான் போய்வருகிறேன் ராமு. இனியாவது நான் மற்றாக்களைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறன்" எனக் கூறியபடி வண்டியை தொடக்கிக்கொண்டு அலுவலகம் நோக்கி விரைந்தான்.

**செல்வி.நிஷாந்தி உதயகுமார்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org